# சிரித்திரன்



எம்மினத்தை துயிலெழுப்பும் தீபாவளித் தியாகி
ஸ்ரீமான். சேவலாருக்கு எனது அஞ்சலி.


CHIRITHIRAN


• A CARTOON MAGAZINE
• நகைச்சுவை ஏடு

நவம்பர் 1970
விலை சதம் -/45

விரைவில் எதிர்பாருங்கள்! துரிதமாக வளர்கிறது!!

# ஈழத்தின் அதியுன்னத தமிழ்த் திரையோவியம்!



லீலா, ஆனந்தன், ஸ்ரீசங்கர், எம். எஸ். இரத்தினம், சோ. நடராஜா, பேரம்பலம், ராம்தாஸ், ராஜகோபால், நாகேந்திரா சித்திரா, சாந்தி மற்றும் பலர் நடிக்கும்

வி. எஸ். ரி. பிலிம்ஸ் ஸ்தாபனத்தாரின்

# 'குத்துவிளக்கு'

மூலக்கதை: வி. எஸ். துரைராஜா

வசனம், பாடல்கள்: ஈழத்து ரத்தினம்

இசை: முத்துச்சாமி

டைரக்ஷன்: டபிள்யூ. எஸ். மகேந்திரன்

# நூறு ரூபா சிரிப்பு



இன்னைக்கு நாள் கூடாது. நான் பிக்பொக்கட் அடிச்சதெல்லாம் நூறு ரூபாய் நோட்டாயிருக்கே!

(மனைவியிடம்) ரொம்ப நாளா கதிர்காமம் போகணும்னுகிட்டு இருக்கியே. உடனே புறப்படு! கடன் வாங்கினவன் எல்லாரும் கடனை நூறு ரூபா நோட்டாகத் திருப்பித்தர முந்தி தலை மறைவாக போயிடணும்!



இந்த அநியாயத்தைப் பாருங்களேன்! எனக்குத் தரவேண்டிய தாபரிப்புப் பணத்தை நூறு ரூபாய் நோட்டுக்களாக கொடுத்திட்டு போயிட்டானே படுபாவி!......



உங்கள் கலைக் கழகத்துக்கு என் அன்பளிப்பாக ஆயிரம் ரூபாவை 10 நூறு ரூபா நோட்டுகளாக அளிக்கிறேன்.



நீங்க தரவேண்டிய நூறு ரூபாய்க்கு செக்காக தாங்க! நூறு ரூபாய் நோட்டா வேண்டாம் சார்...




போன மாதம் ரூபாய் கடன் கேட்டீங்களே! இந்தாங்க நூறு ரூபாய் நோட்டு.





சாமி என் நட்சத்திரத்துக்கு ஒரு அர்ச்சனை பண்ணுங்க. இந்தாங்க ஒரு நூறு ரூபாய் நோட்டு!

-- ஜோக்கிரடீஸ்




## பரிசுக் கேள்வி

செல்வி ஏ. துளசிராமு,
பின்சனேலயா, அட்டாளே.

கே: புகையிரதங்களுக்கு ருகுணு குமாரி, யாழ்தேவி, உடரட்ட மெனிக்கே போன்ற பெண்கள் பெயரை சூட்டுவதன் காரணம் என்ன?

ப: ஆண்கள் போல் ஓடாது பெண்கள் போல் ஊர்ந்து செல்வதால்.

**மு. கண்ணையா பதுளை.**

கே: அன்றில் பறவை அன்று இருந்ததாமே. இன்று ஏன் இல்லே?

ப: மனிதன் விவாகரத்துச் செய்வதைப் பார்த்து கவலேயில் இறந்து விட்டன!

**வ. சிவப்பிரகாசம், வட்டுக்கோட்டை;**

கே: பெரியோருக்கா அல்லது சிறியோருக்கா நாம் பயப் பயப்பட வேண்டும்?

ப: மலேயில் நாம் தடுக்கி விழுவதில்லேயே! புல்லில்தானே நாம் தடக்குப்பட்டு விழுகின்றேம்.

**கு. செல்வஜோதி, மட்டுநகர்.**

கே: காகத்திற்கும் மனிதனுக்குமுள்ள வித்தியாசத்தை உம்மால் கூறமுடியுமா?

ப: காகம் இறந்தால் இழவு சொல்லி அழைப்பதில்லே. மனிதன் இறந்தால் இழவு சொல்லி அழைக்க வேண்டும்.

**சி. முருகேசு, பளே.**

கே: நீர் ஏன் சாஸ்திரம் பார்ப்பதை கண்டிக்கிறீர் மகுடியாரே?

ப: நாள் பார்த்து ஏடு தொடங்கினேம். மொழிஇழந்தோம்.

**சி. முத்தையா, கந்தரோடை.**

கே: மகுடியாரே! நீர் ஆரையும் பார்த்து சிரிப்பதுண்டா?

ப: விலே உயர்ந்த கடிகாரத்தைக் கட்டிக்கொண்டு விலே மதிக்க முடியாத நேரத்தை வீணய் போக்குபவனேப் பார்த்து சிரிப்பதுண்டு.

**க. சிவகுமாரன் மீனும்பிகா, பதுளை.**

கே: பழக்கத்துக்கு அடிமையாவது எதைப் போன்றது?

ப: மேசன் தான் கட்டிய சிறைச்சாலேக்குள் சிறைவாசம் செய்வது போன்றது.

**சு. பத்மினி, 31 சுமணராம வீதி கல்கிசை.**

கே: கலேஞனுக்கும் கறுப்பு மார்க்கட் வியாபாரிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: கலேஞன் உள்ளே பதுங்கியிருப்பதை வெளியே கொண்டு வருகின்றுன். கறுப்பு மார்க்கட் வியாபாரி வெளியே உள்ளதை உள்ளே பதுக்குகின்றுன்?

**ந. நல்லரத்தினம், மட்டக்களப்பு**

கே: தேர்தலுக்குப் பின் யானேயின் மவுசு குறைந்த காரணம் என்ன?

ப: பானே சோற்றுக்கு மவுசு கூடியதால்!

**செல்வி புஷ்பலீலா பெருமாள் பிள்ளே, ஆராமயா வீதி, தெமட்டக்கொடை.**

கே: மகுடியாரே! துன்பம்என்று ஒன்று மனிதனுக்கு இல்லாவிட்டால்......?

ப: தமிழ்ப் படங்கள் வெற்றிகரமாக ஓடமாட்டா.

**தமிழருவி, முருங்கன்.**

கே: தமிழன் என்றெரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்பதன் அர்த்தமென்ன?

ப: இரண்டு நாளேக்கு இரண்டு பேர் ஒற்றுமையாக இருக்க மாட்டார்கள்.

**தெய்வேந்திரன், 31/5, நாச்சிமார் கோவில் வீதி. யாழ்நகர்,**

கே: வீதியில் செல்லும் பெண்களே யெல்லாம் கேலி செய்பவன் தன் தங்கையை யாரேனும் கேலி செய்தால் மாத்திரம் கோபமடைவதேன்?

ப: வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொண்டு வீதியை அசுத்தம் பண்ணும் ஆத்மா!

**ச. இராசையா, 192/12, டாம் வீதி, கொழும்பு-12.**

கே: உலகம் பூராவும் பெண்களே மந்திரிகளாக இருந்தால்...?

ப: ஆண் அரசியல்வாதிகள் பேச்சை இழந்து விடுவார்கள்!

**செ. அடைக்கலம், இளமருதன் குளம்.**

கே: புத்தன், இயேசு இவர்களின் வரிசையில் காந்தியும் இருப்பதேன்?



ப: ஆத்மசோதனேயில் சித்தி அடைந்தபடியால்!

நித்தியானந்தன் யோசப்பு,
**பெரும்பனை வீதி, இரத்மலானை.**

கே: நாகரிகம் என்னும் சொல்லை பெண்கள் எப்படி விளங்கிக் கொள்கிறுர்கள்.

ப: கண்ணை மட்டும் கூலிங் கிளாசால் மறைப்பதை நாகரீக மென விளங்குகிறுர்கள்.

**கே. முருகன், அட்டன்.**

கே: உதட்டில் பொதுநலமும் உள்ளத்தில் சுயநலமுள்ள மனிதர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?



ப: பக்தரை ஏமாற்றும் தங்கம்

**என், ரி. மூர்த்தி, சரவணை, வேலணை.**

கே: கள்ளமற்ற மனைவியை சந்தேகக் கண்கொண்டு வருத்தும் கணவனை யாருக்கு ஒப்பிடலாம்.

ப: பூமாலையை தூக்குக் கயிறென அஞ்சி பித்தெறியும் அந்தகனுக்கு.

**புஷ்பராணி நடேசன், 23, புராணவிகார மாவத்த, கொழும்பு: 6.**

கே: மனிதன் அழுதுகொண்டே பிறக்கின்றுன். அழுதுகொண்டே இறக்கின்றுன், இதற்குக் காரணம் என்ன?

ப: ஆபாசமாகப் பிறந்திட்டேன் என்று அழுகின்றுன். இறக்கும் போது பாசங்களை விட்டுப் பிரியவேணுமேயென்ற கவலையில் அழுகின்றுன்.

**எஸ். அருணு, சட்டநாதர் வீதி, நல்லூர்.**

கே: அன்றைய கற்புலகத்திற்கும், இன்றைய காதல் உலகத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப. முன்னது பளிங்குக் கல்லில் வரைந்த காவியம். பின்னது பனிக்கட்டியில் வரைந்த காவியம்.

**எம். ஐ. ஏ. லத்திப், வார்ட் இல. 11, வவுனியா.**

கே: மனிதனுக்கு மரணமற்ற வாழ்க்கையை அழிக்கக் கூடியது என்ன?

ப: சினிமாவில் நடித்தால் மரணமற்ற வாழ்க்கை. நடிப்பு துடிப்பு என்றும் இருக்கும்.

**இ. ஆறுமுகம், பூதயராயர் ரேட், திருவல்லிக்கேணி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

கே: உமக்கு ஜனுதிபதியாக இருக்க விருப்பமா?

ப: என் மனதைப் பக்குவப் படுத்தி என் மனதிற்கே அதிபதியாக இருக்க இயலாத எனக்கு ஏன் தம்பி உந்தப் பதவி.

**கே. எஸ். நாதன், கரவை.**

கே: பெண்ஒருத்தி என்னை விரும்புகிறுள். என்னசெய்யலாம்?

ப: நாதன் தாள் வாழ்க....!

**லி. கறுப்பையா, நூல்கந்தலா, தெல்தோட்ட.**

கே; என் நண்பர் எந்தக் காரியத்தைச் செய்ய அழைத்தாலும் நாளை என்று பதில் கூறுகின்றுர். காரணம்?

ப: இன்று போய் நாளை வாராய் எனும் பாட்டை செயல் முறையில் கடைப்பிடிக்கிறுர் போலும் நண்பர்.

**எஸ். ராமநாதன், அளவெட்டி.**

கே: பெண்புத்தி பின்புத்தி என்னும் அக்காலக் கூற்று தற்கால பெண்களுக்குப் பொருத்தமா?



ப: இன்று ஆண் புத்தி பின் புத்தி! பெண் பின்னுல் சுற்றித் திரிகிறுர்கள் அல்லவா?

**ஜே: ஜெஸிந்தா, கரவெட்டி.**

கே: நமது பல்கலைக் கழக மசோதா என்னவாயிற்று?




ப: பிரசவித்த பிள்ளைகள் வாழ வழியில்லை. மேலும் பிரசவ ஆஸ்பத்திரிகள் கட்டி யாது பலன்!

**ஐ. சிரோண்மணி, வாசல வீதி, கொட்டாஞ்சேனை.**

கே: கலைஞனுக்குப் பிடித்தது என்ன? பிடிக்காதது என்ன?

ப: பிடித்தது சனம்; பிடிக்காதது விமர்சனம்!

**பொ. பத்மநாதன், பிரதான வீதி, நெடுங்கேணி.**

கே: அம்மையார் ஆட்சி எப்படிப் போகிறது?

ப: அன்னலட்சுமி ஆட்சி அல்லவா!

**சி. சிவகுரு, ஹட்டன்.**

கே: நீர் இறைவனைக் கண்டிருக்கிறீரா?

ப: மங்கும் பொழுதளவும் வாடித் தொழில் புரியும் மக்களின் வடிவில் கண்டிருக்கிறேன்.

**சி. கணேசமூர்த்தி, அச்சுவேலி**

கே: பிறந்ததினத்தைக் கொண்டாடுவதன் காாணம்என்ன?.

ப: இறந்த தினத்திற்கு உயிரோடு இருக்கமாட்டார் என்பதால்!

**வி. தம்பிராஜா, வவுனியா.**

கே: மனிதன் பகைவனைக் கொலை செய்வதன் காரணமென்ன?

ப: பகைவன் இறவாமலிருந்திடுபவன் என்ற பயத்தில்.

# கதாகால க்ஷேபம்

ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே மெய்யன்பர்களாகிய நீங்கள் எல்லோரும் தீபாவளித் திருநாளை நன்னா மங்கள கரமா கொண்டாடியிருப்பேள்.

அதாகப்பட்டது அந்தக் காலத்திலே நரகாசுரனாகப்பட்டவன் இருட்டு மாதிரி லோகத்தைத் தன் தீய செயல்களாலே ஆக்ரமிச்சுண்டு அட்டகாசம் பண்ணிண்டு இருந்தான். பகவான் கிருஷ்ண பரமாத்மாவாகப்பட்டவர் பார்த்தார். அசுரனோட அட்டகாசம் தாங்கல்லே! அவரோட மிஸிஸ் பாமா அம்மாவையும் கூட கூட்டிண்டு புறப்பட்டார். பாமா அம்மா தான் !டிரைவர்,

இப்படியே பரமாத்மா பாமா அம்மாவை டிரவா வைச்சுண்டதாலேதான் இப்ப கூட பெண்டாட்டியை டிரவ் பண்ணச் சொல்லிட்டு பக்கத்திலே கார்லே உட்கார்ந்திட்டு போறா போல இருக்கு. ஒரு பொண் கார் ஓட்டறப்போ, வீதியைப் பார்த்து ஜாக்கிரதையாக, அழகாக ஓட்டறா. வீதி விபத்துக்கள் குறைவுன்னு ஆராய்ச்சி பண்ணி கண்டு பிடிச்சிருக்கா. இதை அந்தக் காலத்திலே கிருஷ்ண பரமாத்மா செஞ்சுட்டார்னா பார்த்துக்குங்கோ!

ரெண்டு பேருமா நரகாசுரனை ஹதம் பண்ணினான்னு வைச்சுக்குங்கோ.

பாருங்கோ மெய்யன்பர்களே! நரகாசுரன் இன்னும் இந்த லோகத்திலேயிருந்து அழிஞ்சுடலை. பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டங்கள் உருவங்கள்லே இந்த லோகத்தையே ஆக்ரமிச்சு அட்டகாசம் பண்ணிண்டு இருக்கான், அவனுக்கு



உதவியா லஞ்சம்ங்கற உதவி அசுரனும் இருக்கான்.

இந்த அசுரனையெல்லாம் வதம் பண்ணி லோகத்தை ரக்ஷிக்க பரமாத்மாவும் பாமா

"ஸ்வாமி சிப்ளாஜி"

அம்மாவும் எப்ப வருவாங்களோ இன்னிக்கு இருக்கிற பயங்கர நிலைமையிலே, இன்று போல் என்றும் வாழ்கன்னு வாழ்த்தினா என்பாடு அதோகதிதான்.

ஆகையினாலே நீங்களும் சௌக்கியமா சந்தோஷமா வாழணும்னு வாழ்த்தறேன்.

ஸ்ரீ நாம ரூப முலகு நித்ய
சுப மங்களம்!

புதுவருடப் பரிசு!

# சிரித்திரன்

## நகைச்சுவை கவிதைப் போட்டி

1970ம் ஆண்டின் முடிவு நெருங்குகிறது. முடிவுறவிருக்கும் இவ் ஆண்டில் நாம் செய்து கிழிந்த தென்ன? இது பற்றிய சிறிய நகைச்சுவை கவிதை எழுதி அனுப்புங்கள்!

**சிறந்த இரு கவிதைகளுக்கு முறையே ரூபா 15/-, ரூபா 10/- பரிசு வழங்கப்படும்.**

கவிதையின் இறுதியடி

**'எழுபதிலே கிழித்த தென்ன'**

விதிகள்:-

1. கவிதை சொந்தப் படைப்பாகவும், நான்கு சீர்களுக்குள் அடங்கியதாகவும் இருக்க வேண்டும்.

2. அரசியல் கலப்பற்றதாகவும் குறிப்பிட்டவர்களைத் தாக்காதவையாகவும், நகைச்சுவையை பிரதானமாகக் கொண்டுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

**முடிவு திகதி: 30 - 11 - 70**

## எண்பா

உங்களால் ஒன்று இரண்டு மூன்று எண்களை வைத்து வெண்பா பாட முடியுமா? அன்று காளமேகப் புலவர் பாடியிருக்கிறாரே. இதோ அவரின் வெண்பா:-

ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு ஏழெட்டு
ஒன்பது பத்துப் பதினொன்று — பன்னி
இரண்டுபதின் மூன்றுபதி னான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழுபதி னெட்டு.

வி. எஸ். ரி.
பிலிம்ஸ்ஸாரின்

# குத்து விளக்கு

வி. எஸ் . ரி. பிலிம்ஸ் ஸ்தாபனத்தாரின் ''குத்து விளக்கு'' துரிதமாகத் தயாராகிறது. பருத்தித்துறையில் கடந்த சில வாரங்களாக, இடைவிடாது படப்பிடிப்பு நடைபெற்று வருகின்றது. யாழ்ப்பாண கிராம சூழலில் உணர்ச்சிகரமான கதையம்சத்தைக் கொண்ட மூலக்கதை தயாரிப்பாளர் வி. எஸ். துரைராஜாவினுடையது. வசனம் பாடல்களை ஈழத்து ரத்தினம் எழுதியிருக்கிறார்.

லீலா, ஆனந்தன், ஸ்ரீ சங்கர், எம், எஸ். ரத்தினம், சோ. நடராஜா பேரம்பலம், ராம்தாஸ், அருளம்பலம், ராஜகோபால், நாகேந்திரா, சித்ரா, சாந்தி, முதலியோர் நடிக்கிறார்கள்.


இசையமைப்பை மியூசிக் டைரக்டர் முத்துசாமி கவனிக்கிறார்.

அமெரிக்க டெலிவிஷன் ஸ்தாபனத்தாரின் செய்திப் படப் பிடிப்பாளரும், சிங்களத் திரைப்பட டைரக்டருமான டபிள்யூ. எஸ். மகேந்திரன் டைரக்ட் செய்து வருகிறார்.

துரிதமாக வளர்ந்து வரும் இப்படம் புதுவருட வெளியீடாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



ஆனந்தன்
லீலா



பேரம்பலம்
சாந்தி




1. புரவலன், பவானி வட்டம், கோவை மாவட்டம், தமிழ் நாடு, தென் இந்தியா.

(கவிதை எழுதுதல் ,பத்தி ரிகை வாசித்தல், பேனா நன்பர் தொடர்பு)

1. கே. முருகேசு, த. பெ. எண் 90. ஈரோடு, தமிழ் நாடு தென் இந்தியா.

( பேனா நண்பர்கள் தொட ர்பு)

3 எஸ். சந்தான கோபாலன், மே. பா. டி. அண்ணாமலை நாடார் அன்ட் ஸன்ஸ், 189 சாதி வீதி, த. பெ. எண்15 ஈரோடு 1 தமிழ் நாடு,தென்

இந்தியா. ( பேனாநன்பர்கள் தொடர்பு- பத்திரிகை, புத் தகம் வாசித்தல் )

4 என். கே. பழனிசாமி, 289, சாதி வீதி, தமிழ் நாடு தென் இந்தியா.

(பேனாநண்பர்கள்தொடர்பு, பத்திரிகை புத்தகம் வாசித் தல்.)

6 ஜி. கைலாசம், 14. பாவா சாமி அக்ரகாரம், திருவையார், தஞ்சை மாவட்டம், தமிழ் நாடு, தென் இந்தியா.

( பேனா நண்பர் தொடர்பு)

7 ஆர். ஜெகன்னாதன், 22, வன்னியர் வீதி, ஈரோடு, தமிழ் நாடு, தென் இந்தியா

(பத்திரிகை படித்தல், பேனா நண்பர் தொடர்பு)

8 எம். ஐ. ஏ. லத்தீப், வாட் நெல் 12, மஸ்ஜித் ஒழுங்கை வவுனியா, இலங்கை.

( வானொலி, கேட்டல், பத் திரிகை படித்தல்,
( பேனா நண்பர் தொடர்பு)

9. க. நடராஜா, மாறே குரூப், மஸ்கெலியா, இலங்கை.

(முத்திரை, புகைப்படம், ரோஜாச் செடிகள் சேடிகள் சேகரித்தல், சங்கீதம், பேனா நண்பர்கள் தொடர்பு.)

## மீன் அம்மா

ஒரு வீடு தீப்பிடித்துக் கொண்டது. அதன் ஆறுவது மாடியில் ஒரு அம்மையார் அகப் பட்டுக் கொண்டார். கட்டிட சுவர் நெருப்பால் சூழப்பட்ட தால் ஏணியை உபயோகிக்க முடியாமல் போயிற்று. ஆகவே நெருப்பணைக்கும் படையினர் பெரிய நெற் ஒன்றைப் பிடித் துக் கொண்டு அம்மையாரைக் குதிக்கும்படி துரிதப்படுத்தினார் கள்.

அம்மையோ அந்த நெற்றில் தண்ணீரை நிரப்பும் படி எரி யும் மாடியிலிருந்து கத்தினார்.

நெருப்பணைக்கும் படையி னரோ ஒன்றும் விளங்காமல் அவள் கூறியபடி நெற்றில் தண் ணீரை ஊற்றி ஒரு குளம் போல் செய்தார்கள்.


அடுத்த நிமிடம் அந்த அம் வையார் ஒரு பெரிய கண்ணாடிப் பாத்திரத்தில் உள்ள தண்ணீரை கொட்டினாள். அதில் இருந் தன அவள் வளர்த்த பொன் மீன்கள். நெருப்பணைக்கும் படை யினர் மீன்களை வேறொரு பாத் திரத்திற்கு மாற்றிய பின்னரே அம்மையார் மாடியில் இருந்து நெட்டில் குதித்தார்.

மகுடி,

மே/பா. ''சிரித்திரன்''
1014,சென். பெனடிக்ஸ் வீதி
கொட்டாஞ்சேனை.

கும் (குமாரசாமி) அன்ட் விஜி (விஜயராஜேஸ்வரி)

-சௌ-



# சொல்லுங்கள் கேட்கிறோம்

ரா. வெங்கடேசன்,
124, டாம் வீதி, கொழும்பு-12

சிரித்திரன் அகராதி வெகு நேர்த்தி. சைவக்கடை மனைவி, புதுநோக்கு. சித்திரன் நாளுக்கு நாள் முன்னேறுகிறது. வாழ்க.

இ, கமலலோசனி,
மெயின் வீதி, ஹட்டன்.

ஆசிரியர் அவர்களே, எங்கே ஒய்யப்பங் கங்காணியாரைக் காணவில்லை. பயணம் போய்விட்டாரா? கும் அன்ட் விஜிக்கு எமது பாராட்டுக்கள்.

எம். ஐ. எம், பாரூக்,
கஹட்டகலகிய

சிரித்திரன் பத்திரிகையைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. நன்கு படித்து ரசிக்கக் கூடியதாக இருக்கிறது ஒவ்வொரு பகுதியும்.

ஆர்- ராமஸ்வாமி, தெகிவளை

சிரித்திரனில் சிரிப்பு ஹல்வாவிற்கு கசுக்கொட்டை போல சுவையூட்டுகின்றன. சிரிப்பு மேலும் மேலும் வளருமாக.

எஸ். தவநேசன்,
பேராதனை வீதி, கண்டி.

வாசிட்டி வனிதை வந்து எல்லோரையும் கலகலக்கச் செய்துவிட்டாள். கருணையோகனுக்கு வாழ்த்துக்கள்! இது போல் இன்னும் வருமா?



64, சென். பெனடிக்ட் மாவத்தை, கொழும்பு 13ஐ சேர்ந்த செல்வன். குறளரசு தன் பிறந்த தினத்தை 3-11-70 ல் கொண்டாடுகிருர். அவருக்கு சிரித்திரனின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## டாமோடிரன் அம்மியார்



Mrs. டா. டார்ளிங்......

Mr. டா. யேஸ் டார்லிங்......

Mrs. டா. வாட் ஈஸ் திஸ் எண்ணை முழுக்கு?

Mr. டா, அது தெரியாதா டார்லிங்! அது...... கார் செர்விஸ் பண்ற மாதிரி ஆளுக்கு எண்ணை வச்சு சர்வீஸ் பண்றது.

Mrs. டா- இஸ் இட் ஸோ... தாங்யூ டார்லிங்!


தைத் திங்களிலிருந்து வெளிவருகிறது!

"குமரன்"

குழந்தைகள் மாத இதழ்

குழந்தைகளின் கல்வி, கலை, இலக்கியங்களில் ஆர்வமுள்ளவர்கள் விற்பனை செய்ய விரும்புவோர்கள்.

கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்க.

ஆசிரியர்:-

குமரன், 201, டாம் வீதி, கொழும்பு-12.

# வாசிற்றி மன்னன்



வந்தாரே வந்தார்
வாசிற்றியால் வந்தார்.
வந்தாரே வந்தார்
வாசிற்றி மன்னனிவர்!

ஐந்துவருடம் முடித்தும்
ஆயிரமாய்ச் செலவழித்தும்
பிந்தியொரு பாடம்பெயில்
பெற்றிங்கு வந்தாரே.

''வாடாவென் றன்மகனே
வயல்போவோ மெ'னச் சொன்னால்
'போணைஅப்பு நான் மாட்டேன்
'பொலிடோல்' இருக்கு' தென்பார்.

'மச்சான்' என அழைப்பார்
'மைனர்'பலர் கைகோப்பார்
வைச்சாரோ பிளாவினில்வாய்
வாய்மொழியே மாறிவிடும்.

காலை கடற் கரையில்
மத்தியானம் ஆலமரம்
மாலைதியேட் டரடி
மன்னனிவர் நேரசூசி.

வேலையொன்று மில்லையிவர்
வீண்பொழுது கழிக்கின்றார்
ஆலங்கட்டை வீதியிலே
ஐந்துமுறை உலாவருவார்.

ஆங்கிலேயர் நாகரிகம்
அதுவேயிவர் (அ)நாகரிகம்
'லோங்சோ' தொடையிறுக்கும்
துடித்திடுவார் பெல்றிறுக்கும்

ஆலடியில் அரைப்பொழுது
அரட்டை அடித்தபின்பு
மாலடியில் முன்னிரவு
மன்னவற்கோ வேலையிது.

'பீட்டில்' - எனச் சொல்லுகிறார்
வீட்டில் ஒரு நேரமில்லை
பாட்டென்னவோ இவர்பாடு
பாட்டென்னவோ 'பொம் பொம் பொம்'

செகவீரன் என்கின்றார்
சீப்பறியாத் தலைக்கோலம்
செகசக்திச் சலூன்காரன்
சிரம்கண்டு சிரிக்கின்றான்.

படித்தபடிப் பிதுவோ
பாழான நேரமெங்கே
படித்துக் கிழித்ததெல்லாம்
பரண்மீது தூங்கவிட்டார்!

இவர்முடித்த படிப்பிதுதான்!
இதுதானோ கற்றகலை?
எவர்திருந்தி விட்டாலும்
இவர்திருந்த மாட்டாரே!


வந்தாரே வந்தார்
வாசிற்றியால் வந்தார்
வந்தாரே வந்தார்
வாசிற்றி மன்னனிவர்.

—மேல்லையூர்
பொன் தேவி.

## எடுபிடி

மழை 'சோ' வென்று பெய்தது.

சும்மா இருந்த தவளையைப் பார்த்து ஆமையானது அதோ பார்... நமது ஊருக்கு நேற்று வந்த அந்த மழை, பாம்புக்குக் கொஞ்சமும் பயப்படாமல் எவ்வளவு பெரிய சத்தம் போடுகிறது... பார்த்தாயா ? இவ்வளவு காலமும் இங்கேயே வாழ்கின்ற நீ பாம்புக்குப் பயந்து ஊமையாக வாழ்கிறாயே! என்று உசார்ப்படுத்தி தவளையைச் சத்தம் போடத் தூண்டி விட்டது:




உசார் மடையனான தவளை உடனே சத்தம் போட்டுக் கத்தத் தொடங்கியது. தவளையின் சத்தத்தைக் கேட்ட பாம்பு தவளை இருக்கும் இடத்தை அடையாளம் கண்டு கொண்டு மெதுவாக வந்து அதைப்பிடித்துக் சாப்பிட்டு ஜீரணித்தது. அதுவரை பேசாமல் இருந்த ஆமையோ ஒன்றும் நடவாதமாதிரி தன்பாட்டில் நீரில் நீந்திச்சென்றது.

குளத்தில் இருந்த மீன்களில் ஒன்று மற்றதைபார்த்துச் சொன்னது:-

தட்டிவிட்டவன் தப்பிவிட்டான்
எடுபட்டவன் பிடிபட்டான்.

—காசி ஆனந்தன்

மாப்பிள்ளையின் தந்தை:
சீதனப் பணத்தை பத்து ரூபா நோட்டுகளாகத் தாங்க! 50 ரூபா நோட்டுகள் 100 ரூபா நோட்டுகள் வேண்டாம்.

ஜெயமணி மஸ்கெலியா.

ஃ ஃ ஃ

ஆசிரியர்-: உலகத்திலே பெரிய அறிவாளி யார்?

மாணவன்:- பல்லி சார்!

ஆசிரியர்:- போடா முட்டாள்...

மாணவன்;- படிச்சவங்ககூட பல்லி சொல்லுறதைக் கேட்டுத்தானே எல்லாக் காரியமும் செய்யுறாங்க.

ஜோக்ரடீஸ்.

# ஆச்சி பயணம் போகிறாள்

செல்வி மீண்டும் ஒரு தடவை சத்தி எடுத்தாள். பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

''என்ன செல்வி? '' என்று கவலையோடு கேட்டான், சிவராசா.

ஒன்றுமில்லை'' என்று சிரித்தாள், செல்வி தன் வேதனையை அவனுக்குக்காட்டாமல் மறைக்க முயன்றாள், அவள்.

பஸ் விரைந்து கொண்டிருந்தது; அருவிகளையும், தோட்டங்களையும் தாண்டி விரைந்தது.

செல்விக்கு ஓரளவு தெளிவு வந்தது.

''பின்னால் அந்த பெரிய 'சீற்' சும்மா இருக்கு...அங்கைபோய் இருப்பமா, மாமி?''

''சரி பிள்ளை...நீயும் அதிலை கொஞ்சம் படுக்காலம்...''என்று ஆச்சி எழுந்தாள்.

''நுவரேலியே குளிர் நகரம் தான், ஆச்சி...இலங்கையின் சுவிற்சலாந்து இது...ஐரோப்பியர் வாழக்கூடிய காலநிலை இங்கு தான் இருக்கிறது...பலவகை மலர்களுக்கும், பெரும் பெரும் நீர் வீழ்ச்சிகளுக்கும், இயற்கை அழகிற்கும் நுவரேலியா இருப்பிடம் சில்லென்ற குளிர்எப்போதும் இருக்கும் அழகிய பூங்காக்கள் உள்ளன. எங்கு பார்த்தாலும் வர்ண ஜாலங்களோடு சேர்ந்த பசுமை கொலு இருக்கும். கிரகரி ஏரி என்று ஒரு ஏரி இருக்குது, ஆச்சி! அதன் கரையில் நின்று பார்க்க வேண்டும் உணரக்கூடிய அழகு அது! நுவரேலியா கடல் மட்டத்திலிருந்து 6180 அடி உயரத்தில் அமைந்துள்ள நகர்...''

''எவ்வளவு உயரம்?''

''6180 அடி, ஆச்சி! இப்போது யாழ்ப்பாணத்திலும் பார்க்க நாங்க 6180 அடி உயரத்தில் இருக்கின்றோம்''

''அப்ப இஞ்சை இருந்து பார்த்தால் யாழ்ப்பாணம் தெரியுமோ?''

''தெரியாது இங்கு தான் பேதுருதாலகாலை என்றொரு மலைச் சிகரம் இருக்கிறது. இலங்கையிலேயே உயரமான பகுதி அது தான் 8281 அடி உயரமானது அதன் உச்சிக்கு ஏறுவதற்கு இப்போது பாதை வெட்டியிருக்கிறார்கள் சறுக்கும்...கவனமாக ஏறவேண்டும்''

''நீ ஏறி இருக்கிறாயோ?''

''ஒரு முறை ஏறி இருக்கின்றேன் முகில்கள் கால்களுக்கு இடையே தவழும் படங்களில் வருகின்ற கனவுக் காட்சி போல இருக்கும் சொர்க்கத்திற்கு வந்து விட்டோம் என்ற உணர்வும் ஏற்படும் முகில்களைக் கைகளினால் பிடிக்கலாம் அங்கு சில சிறு அருவிகள் சலசலத்து இறங்குகின்றன...நல்ல...சுவையான நீர் உயர் மரங்கள் சலசலத்தோடும் அருவிகள்...கால்களிடையே தவழும் முகில்கள் வெகு அற்புதமாக இருக்கும் பேதுருதாலகாலைச் சிகரத்தை நோக்கி ஏறும்போது''

''ஒருக்கா ஏறுவோமா?'' என்று கேட்டாள், செல்வி மெதுவாக அவன் தோள்களில் சாய்ந்தபடி.

''கலியாணமானதும் வந்து ஏறுவோம்'' என்று 'கிசுகிசு'த்தான், சிவராசா.

''நீ கன இடம் பார்த்திருக்கிறாய்...'' என்றாள், ஆச்சி.

பஸ் விரைகிறது; திடீரெனப் பெய்த மழை 'சட்'டென்று நின்றுவிட்டது. பெய்த சுவடே தெரியாமல் வானம் வெளுத்திருந்தது.

''நுவரேலியாவில் ககலை என்றொரு பூந்தோட்டம் இருக்கிறது, ஆச்சி! அது ஒரு மலர்க் காடுதான் அங்கு எத்தனைவகை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் சாப்பிடாமல் பார்த்துக்கொண்டே இருக்கலாம்...''

''நாங்கள் அங்கைபோவம்...''

''சாப்பிடாது, இருக்கவா, செல்வி''


''மிச்சம் தானே?...''

''இப்ப ஏதோ கனக்கவே சாப்பிடுகிறம்''

''தலையைச் சுத்துது தள்ளியிருங்கோ கொஞ்சம் படுக்கப் போறன்...''

சிவராசா தள்ளி இருக்க அவள் படுத்தாள்.

''அப்பிடி அவன்ரை மடியிலை தலையை வைச்சுப் படு, பிள்ளை!



**மனைவி:-** அத்தான் இந்தியாவுக்குப் போட்டு வருவமா... அங்கே நல்ல நைலெக்ஸ் சாரியிருக்காம்.

**கணவன்:-** ஐயோ! அங்கே நக்ஸல் பாரியும் இருக்காம்.

—ராமி

சும்மா கிடக்கிறுய் தலையைச் சுத்தும்''

செல்வி வெட்கத்தால் குழைந்தாள்.

''நல்ல பிள்ளையள் இப்பிடி இருக்கிறியளே நீ படு மோனை அதிலை ஒன்றுமில்லை''

மெதுவாக அவன் மடியில் தலைவைத்துப் படுத்தாள்செல்வி.

ஆகா!

செல்வியின் தலைச்சுற்றல் நின்றும் கூட, பின் அவள் எழும்பவில்லை.

நுவரேலியாவை விட்டுப் பஸ் புறப்பட்டபோது பிற்பகல் மூன்று மணியாகிவிட்டது. நுவரேலியாவில் வெலிமடை, பண்டாரவளை எனும் இடங்களுக்குச் செல்கின்ற சனம் பஸ்ஸில் ஏறியதால், பஸ் நிறைந்துவிட்டது.

செல்வி எழுந்து அவன் இடத் தோளில் தலைசாய்த்துத் தூங்கினுள்.

ஆச்சிக்குத் தண்ணீர் விடாய். சோடா விற்றுக்கொண்டுபோனவனைக் கூப்பிட்டாள்.

''மோனை ஒரு சோடா, தா''

அவன் சோடாவை உடைத்துக்கொடுத்தான். சிவராசா அமைதியாகக் கவனித்தான்.

''இதென்ன, ராசா, நான் இனிப்புச் சோடா கேட்க, அவன் உப்புச் சோடாவை உடைத்துத் தாருன்...''

சிவராசா சிரித்தான்.

''சோடா என்று இங்கினைக்கை கேட்டால் வெறும் சோடாதான் வரும் பார்லி என்று கேட்க வேணும்...வேறை வாங்கித் தரவோ?''

''வேண்டாம்....வேண்டாம்''

சோடாவை ஒரு விதமாக ஆச்சி குடித்தாள். பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

செல்வி தூக்க மயக்கத்தால் சாய்ந்து விழப்போனுள். சிவராசா தனது இடது கையால் அணைத்துப் பிடித்துக்கொண்டான்.

அந்த வேளையில் சிவராசா தன் பொறுப்பை உணர்ந்துகொண்டான். தன்னை ஓர் இளைஞனுக நினைத்திருந்த அவன் அவளை அணைத்த அந்த வேளையில் தன்னை ஒரு உத்தம துணைவனுக எண்ணிக் கொண்டான்; அப்படி உணர்ந்தான். தன்னை நம்பி ஒரு உயிர் கூடவருகிறது; வாழ்நாள் முழுவதும் தன்னேடு வாழப்போகிற உயிர் அது. அதன் கண்கள் கலங்காமல், காப்பாற்ற வேண்டியது தன் கடமை என அவன் உணர்ந்தான். தன்னை அவனிடம் ஒப்படைத்துவிட்டு, கவலை மறந்து துயின்ருள், அவள்.

-பொறுப்பான துணைவன் அவன்.

அரைக் காற்சட்டை போட்டு, கோயில் வீதியில் பந்தாடிய சிவராசா இன்று ஒரு பெண்ணின் பொறுப்பான துணைவன்?

காலம் எவ்வளவு மாற்றங்களைச் செய்துவிடுகின்றது.

''செல்வி...'' என மெதுவாக விளித்தான், அவன்.

''ம்...'' என்ருள், அவள்.

''கள்ளீ...நீ விழிப்புத்தான்''

''நான் நித்திரை...'' என்ருள் செல்வி.

''இனி வாற இடம் என்ன?'' என்று கேட்டாள், ஆச்சி.

''வெலிமடை...'' என்ருன், சிவராசா.

வெலிமடை என்ற அச்சிறிய நகரில் பலர் இறங்கினர்.

''நாறங்...நாறங்...'' என்றபடி ஒரு பையன் பஸ்ஸினுள், ஏறினுள், அவன் கையில் ஒரு தட்டு; அதனுள் பழங்கள்.

''என்ன தோடம்பழம்போல இருக்குது?'' என்ருள் ஆச்சி.

''இது தோடம்பழமில்லை, ஆச்சி! 'நாறங்' என்பது''

''அப்ப சனமா இருக்கும்... இப்ப குறைவா இருக்கும்.

''அங்கையா எப்பவும் சனந்தான்.''

கொண்டக்டர் வந்தான்.

''அம்மா, எங்கை போறது?''

அம் மலை நாட்டுப் பெண் ஒரு தோட்டத்தின் பெயரைக் கூறினுள்; பெயர் நினைவிலில்லை.

''அங்கை பஸ் நிக்காது, அம்மா...இறங்குக...'' என்ருன் கொண்டக்டர்.

''எங்கடை நாறத்தங் காயோ?''

''அப்படியுமில்லை! இது கொஞ்சம் இனிக்கும்'' என்றான் சிவராசா.

''என்ன இனிக்கும்?'' என்று மெதுவாகக் கேட்டாள்'' செல்வி.

''இது...'' என அவளைத் தட்டினான், சிவராசா.

இப்ப இப்பிடித்தான் சொல்லுவியள்''

''எப்பவும் இப்படித்தான் சொல்லுவன்''

''என்னவாம் உன்ரை மனிசி'' என்று கேலி செய்தாள், ஆச்சி.

''நாறங் வேணுமாம்'' என்று சிரித்தான், சிவராசா செல்வி ஆச்சியின் கேலியால் சிவந்து போனாள்.

பண்டாரவளையில் சற்றுநேரம் பஸ் தங்கி நின்றது.

''பாவம் டிரைவர் காலமை துவக்கம் பஸ் ஓடுகிறான்...'' என்று இரங்கினாள், ஆச்சி.

''பாவம், தான்...ஆனா நல்ல 'ஓவர்ரைம்' இருக்குத்தானே? என்றாலும் வேலை கஷ்டம்தான்''

''எவ்வளவு பொறுப்பான வேலை எங்கடை யாழ்ப்பாணத்து பஸ் டிரைவர்மார் உப்பிடி மலையிலே பஸ் ஓடமாட்டினம் உவன் என்ன மாதிரி ஓடுகிறான்'' என்று வியந்தாள், ஆச்சி.

பண்டாரவளையில் ஏறிய ஒரு பெண்-சுமார் ஐம்பது வயது மதிக்கலாம் - ஆச்சிக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டாள். பார்த்ததுமே மலைநாட்டுத் தமிழ்ப் பெண் என்பதைப் புரிந்து கொள்ளலாம். வெற்றிலை போட்டுப் போட்டுக் காவி ஏறிய பற்கள்.



ஒருவர்: உன்னுடைய அண்ணாவின் பெயர் என்ன?

ஒருத்தி: ஞாபகமில்லை. மறந்து போனேன்.

ஒருவர்: என்ன! பிதாவுக்கு சமமான அண்ணாவையா மறந்தாய்!

ஒருத்தி: அண்ணா பணக்காரனாக இருந்தால் தானே அவர் பெயர் ஞாபகமிருக்கும்!

ஜோக்கிரெட்டீஸ்.

''அம்மா, எங்கை போறீங்க... கதிர்காமத்துக்கா...?'' என்று வந்து இருந்ததும் பேசத் தொடங்கிவிட்டாள். ஆச்சிக்கு ஒரு பேச்சுத் துணை அகப்பட்டு விட்டது.

''ஓமோம் கதிர்காமத்திற்குத் தான்...''

''எங்கிருந்து வாறீங்க...''

''நாங்க யாழ்ப்பாணம் கண்டியிலிருந்து வாறம்...நீர் தோட்டத்திலையா வேலை செய்கிறீர்?''

''நானா...? நான் தோட்டத்திலை வேலை செய்யுறது இல்லை எனக்கு ஒரு மகன் கொழும்பிலை இருக்கான் ஜெம்பட்டா ஸ்றீற்றிலே பிஸினெஸ் செய்யிறான்... அங்கே சிலநாள் போவன் ஒரு மகன் மன்னாரில் இருக்கான் எங்க ஆச்சி வீடு வெல்லவாயாவில் இருக்கு...வெல்லவாயாவுக்கு மூன்று மைல் முன்னாலை இருக்க...அங்கைதான் போறன்...வெத்திலை சாப்பிடுங்க''

''எனக்குப் பச்சைப்பாக்குப் பிடிக்காது தலையைச் சுத்தும்''

''அதுதானே ருசி கதிர்காமத்துக்கு இப்ப ஏன் போறிங்க திருவிழாக் காலத்திலை போகலாமே...''

''வெல்லவாயாவுக்குப்போகுது தானே?...''

''ஆமா போகுது ஆனால், அந்தத் தோட்டத்திலை நிக்காது...''

''அதுக்கு நான் போயாகணுமே?''

''நான் என்ன பண்றது இது எக்ஸ்பிரஸ் வெல்லவாயவிலை தான் நிக்கும் இறங்குங்க மற்ற பஸ்ஸிலை ஏறுங்க''

''அப்பநீங்க போயிட்டுவாங்க அம்மா, இது எக்ஸ்பிரஸ் நிக்காது'' என்றபடி அப்பெண் இறங்கிப் போனாள்.

ஆச்சியின் பேச்சுத் துணை போய் விட்டது.

பஸ் புறப்பட்டது.

''செல்வி, பண்டாரவளை என்ற இங்கு காரைநகராக்கள் கடைாவைச்சிருக்கினம்... சுரேந்திரன் என்று என்னோடை ஒரு நண்பர் படித்தவர் அவருடைய தகப்பன் இங்கை கடை வைச்சிருக்கிறார்... காரைநகராக்கள்தான் பராசக்தி அம்மன் ஸ்ரோர்ஸ் என்று பெயர் படிக்கிற காலத்திலை அவரோடை இங்கு ஒருக்கா வந்திருக்கிறன் சுரேந்திரன் இப்ப மன்னாரிலோ, புத்தளத்திலோ போஸ்ற் மாஸ்ரராக இருக்கார் கலியாணம் செய்திட்டார் அவரை நான் சந்தித்துப் பல ஆண்டுகள் வாழ்க்கையிலோ

எத்தனை எத்தனை பேரைச் சந்திக்கிறம் பழகுறம் பிறகு பிரிந்து போகிறம் எங்காவது 'சந்தித்தால் உண்டு' !


'' ம்... சொல்லுங்க ''

எனக்கு பாலா என்றொரு நண்பன் இருந்தான்... வலு இட்டமாகப் பழகினம் எங்களுடைய நட்பை விட வேறு ஒரு நட்பில்லை என்றிருந்தம் ஆனுல். கடைசியிலே அந்த நட்புப் போன இடம் தெரியாது அற்பகாரணம் ஒன்றிற்காக அவன் என்னை வெறுத்து ஒதுக்கிஞன் ஆனு. செல்வி. அவனுக்கு என்னிதயதில் நாஞெதுக்கிய இடத்தை என்னுலே அழிக்க முடியவில்லே ; வைத்தி என்றொரு நண்பன் எனக்குள்ளான் வெகு அமைதியானவன் என்மீது அவன் வைத்துள்ள மதிப்பும் பாசமும் அதிகந்தான் அவன் மீது அன்பு செலுத்த முடியவில்லேப் போல இருக்குது... அடிக்கடி கடிதம் போடுவான்''

பஸ் விரைகின்றது.

''செல்வி சின்ன வயது நினைவொன்று ஞாபகம் வருகிறது மிகச் சின்ன வயது நினைவுதான் இந்து கலவன் தமிழ்ப் பாடசாலேயில்—அப்போது அந்தப் பாடசாலே இந்துக் கல்லூரிக்கு முன் இருந்தது—இரண்டாம் வகுப்புப் படிச்சுக் கொண்டிருந்தேன்! பலர் கூட என்னேடு படித்தார்கள் எங்களுக்கு ஒரு ரீச்சர் அம்மா படிப்பித்தார் மிக அன்பானவர் கண்முன் நிழலாக அவர் உருவம் இருக்கு அவருடைய கணவரும் அங்குதான் படிப்பித்தார் இப்ப அந்த ரீச்சர் இறந்து போயிட்டா அந்த ரீச்சர் அம்மாவின் தங்கையும் என்னேடு கூடப்படித்தாள்

(தொடரும்)



ஒருவர்: என் மனைவி விவாகரத்துச் செய்த பிறகு வீட்டு ஒளியே மங்கி விட்டது.

மற்றவர்: .........?......?.........?

ஒருவர்: அவளின் மூக்குத்தி வயிரம் இப்ப வீட்டுக்குள் ஒளி வீசுவதில்லே.

-ராமி


பொம்மை

கலையுலகின்
பெருமைப்
பெட்டகம்

இலங்கை முழுவதும்
சப் ஏஜண்டுகள் தேவை...

சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

84, லோரிஸ் ரோட், கொழும்பு-4.

அம்புலிமாமா

சிறுவர் சிறுமியர்
விரும்பிப் படிக்கும்
மாதப் பத்திரிகை

இலங்கை முழுவதும்
சப் ஏஜண்டுகள் தேவை.

சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

84, லோரிஸ் ரோட், கொழும்பு-4.

# இலக்கியத்தில் வயிறெரிச்சல்

எம்மொழி பழமைப் பாரம்பரியம் கொண்டது. பல புலவர்கள், கவிச்சக்கரவர்த்திகள் தம் பாடல்களால் எம் மொழிக்குப் புத்துயி ரூட்டினர். ஆனல் அவர்களின் வாழ்க்கைத்தரம் வானளாவிய ஒன் றல்ல. பட்டினி கிடந்தனர். வள்ளல்களின் பெருமைகளை வாயாரப் பாடி வாயை நிறைத்தனர். கொடுத்தவனை ஏற்றினர். கொடாதவர் களைத் தூற்றினர். இதனல் தான் ''போற்றிலும் போற்றுவர் பொருள் கொடாவிடில் தூற்றிலும் தூற்றுவர்'' எனப் புலவன் ஒரு வன் பாடிப் போந்தான்.

ஒரு புலவர் ஓர் ஊர் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். வயிற்றில் பசியோ எரிமலையாக வெடித்தது. புலவரின் பெயரோ வசைகவியாண்டான் பகியால் வாடிய வசைகவியாண்டான் சேஷி என் பவள் வீட்டிற்குள் சாப்பிடுவதற்காக உள் நுழைந்தார். அவளோ ஆங் காரப் பத்தினி இவரை அவள் சரியாக உபசரியாமல் உதாசீனம் செய்துவிட்டாள். கோபக்கனல் தெறித்தது புலவருக்கு. வழுக்கி விழுந்தது வசைகவி.

''வாயெரியக், கையெரிய வயிறெரியச்
சட்டிவைத்து வறுத்துக் கொட்டிக்
காயெரியக் கடினமுடன் அரைவயிற்றுக் (கு)
அன்னமிட்ட கடினக்காரி.
தாயெரிய மகளெரியச் சேஷியெனும்
மொட்டை முண்டை தலைமேல் பற்றித்
தீயெரியக் கண்டக்கால் என்னுடைய
வயிற்றெரிச்சல் தீரும்தானே.

புலவர் பொல்லாதவர் போலத் தெரிகின்றது. அவருக்கு ஏற் பட்டது. வயிற்றெரிச்சல். சேஷி என்பவள் மீதுதான் வயிற்றெரிச் சல் ஏற்பட்டது. ஆனல் சேஷியின் தாயும், மகளும் தீயினல் எரி யக் கண்டால் தான் தனது வயிற்று எரிச்சல் தீருமெனச் சொல்லு கின்றார் புலவர். பாவம் எல்லாம் வயிற்றுப் பசியான் கொடுமை தான்!

புகழ் பரப்பி, தமிழ் வளர்த்து தரணியாண்டான் பாண்டிய மன் னன். அந்தப் பாண்டிய மன்னனின் கல்யாண விழாப்பார்ப்பதற் காகச் சென்றார் ஔவையார். மூதாட்டி ஔவைக்கு பசியோ வயிற் றைக் குடைந்தது. ஆனல் சாப்பிட வந்த கூட்டமோ ஔவையை நெருக்கித் தள்ளியது. ஔவையார் கூட்டத்தை விட்டுத் தனியே வந்து ஓரிடத்தில் நின்றார் அப்பொழுது ஒருவர் ஔவையாரைப் பார்த்து சாப்பிட்டாய் விட்டதா பாட்டி? விருந்து எப்படியிருந்தது எனக்கேட்டுவைத்தார். பைந்தமிழ் பாட்டி பாவால் உரைக்கின்றார் விடை.

''வண்டமிழைச் சேர்ந்த வழுதி கலியாணத்து
உண்ட பெருக்கம் உரைக்கக் கேள்—அண்டி
நெருக்குண்டேன், தள்ளுண்டேன், நீள்பசியினலே
சுருக்குண்டேன், சோறுண்டிலேன்''

நெருக்குண்டேன், தள்ளுண்டேன், என்று சொல்கிறார் ஔவைப் பாட்டி கடைசியாகச் சொல்லுகின்றார் நீள்பசியினல் சுருக்குண்டேன் என்று. பரவாயில்லை! ''உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு'' என்று சொன்னவர் எங்கள் ஔவையல்லவா?

(6-ம் பக்கம் பார்க்க)

## வைக்கோல் மஹாத்மியம்

நம் நாட்டில் வீட்டு வளவில் வைக்கோல் இருந்தால் மாடு இருக்கிறது என்று பொருள் ஆனல்

வட அயர்லாந்தில் வீட்டு முற்றத்தில் வைக்கோல் இருந் தால் நாய் இருக்கிறது ஜாக்கி ரதை என்று அர்த்தம்.

இங்கிலாந்தின் கிராமப் புறத்தில் யாராவது தொப்பியில் வைக்கோலை சொருகிக் கொண்டு நடக்கக் கண்டால், அவர் யார் கூப்பிட்டாலும் வேலைக்கு வரத் தயாராக இருக்கிறர் என்பதைக் குறிக்குமாம்,

ஸ்காட்லாந்தில் வீட்டுமுற் றத்தில் வைக்கோல் இருக்குமா னல் மனைவியை உதைக்கும் கணவன் இருக்கிறன் என்று அர்த்தம்.

---

ஹெலிகாப்டர் படத்தை முதல்முதல் வரைந்தவர்லியனர் டேடாவின்ஸி என்ற இத்தாலிய ஓவியர் என்பது மேல் நாட்ட வர் கருத்து.

சார்ல்ஸ் கிப்ஸ்ஸ்மித் என்பவர் தான் முதன் முதலாக வரைந்தாக இப்போது கண்டு பிடித்திருக்கிறர்கள்.

இவர் வரைந்தது லியனர் டோடா வின்சியின் காலத்துக்கு 150 வருடங்களுக்கு முன்னதாக. அவர் வரைந்த படத்தை இன் றும் டென்மார்க்கில் காணலாம்.

## பிரியமான பிரியாணி

''பிரியாணி'' என்ற சாப்பாடு ஏதோ அண்மைக் காலத்திலே கண்டுபிடிக்கப்பட்ட சாப்பாடு என்று நினைப்பது சரியல்ல அந்தச் சாப்பாடு சங்க காலத்திலேயே தெரிந்திருந்தது. அந்த நாளிலே அது அவர்களுடைய நாளாந்த உணவிலே ஒன்றாக இருந்தது.

என்ன! அதிசயமாக இருக்கிறதா. பறம்பு மலையின் வளத்தைப் பற்றிப் பாட வந்த கபிலர் பிரியாணியைப் பற்றி ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார். இந்தப் பாட்டு, புறநானூற்றிலே காணப்படுகிறது. புறநானூறு 113 ஆம் பாட்டிலே ''மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்'' என்று தொடங்கி ''அட்டான்றானாக் கொழுந்துவை ஊன் சோறு'' என்று வருகிறது இதிலே கூறப்பட்ட ''ஊன்சோறு''பிரியாணி தான்.

வசைகவியாண்டானிடம் சென்று ஔவையாரிடம் போய், காளமேகத்தையும் சந்தித்து வந்த நாம் கடைசியாக அவிநாசிப் புலவரிடம் செல்வோம். புலவரோ மிக ஏழை அடுப்புக்குள் பூனை குடிகொண்டிருந்தது. பிள்ளைகளோ வறுமையால் வாடினார்கள். இந் நிலையில் ஒரு செல்வன் ஒருவனிடம் உதவி தேடிச் சென்றார். அதிக நேரமாகக் கதைத்துக்கொண்டு இருந்த செல்வன் சாப்பாட்டு நேரம் வந்ததும் போன இடம் தெரியவில்லை. புலவருக்கோ பசி சாப்பாட்டு நேரத்தில் தன்னைக் கைவிட்டுச் சென்ற செல்வன் மீது அவிநாசிப் புலவருக்குக் கோபம் உண்டானதில் வியப்பேது?

''சீவன் உள்ள அளவுமே நட்டுவக்காலியும்
தேளும் சினந்து கொட்டத்
திருதிரெனும் முண்ட விழியில் குழவி கொட்ட—அது
செங்குருதி யாறு கொட்டப்,
பாவி மகனே! உனது வாசலில் சாம்பிணப்
பறைகள் மிகவந்து கொட்டப்
பந்தரடி மாரடித்(து) (உ)றவினர்கள் வாய்க்கரிசி
படிநெற்கொணர்ந்து கொட்டப்
ஆவலொடு கால்மாட்டில் உனது பெண்டாட்டி கண்
அருவியொடு கோட்டை கொட்ட
ஐயையோ என் செய்வேன்? என்று நீர்மாலை
அதனைக் கொணர்ந்து கொட்டச்
சாவடியில் அறுதலிகள் கூடியழ நீ வந்து
சப்பாணி கொட்டியருளே!
சண்டிக்குலா மகனே! வெங்கட்டராமனே!
சப்பாணி கொட்டியருளே!!''

ஒரு நேரச் சாப்பாடு தரவில்லையென்பதற்காக பலவிதமான பொருட்களைக் கொட்ட விடுகின்றார். பசி, பசி, எங்குமே பசி!

—திக்கவயல் தர்மலிங்கம்




வேல் முருகா ஊதுபத்திகள்

**சிவன்:** பக்தா! ஏனைய பக்தர்கள் எல்லோரும் மோட்சத்தை விரும்ப, நீ மட்டும் ஈழத்தில் பிறவி எடுக்க விரும்பும் காரணம் யாதோ?

**பக்தன்:** எல்லாம் வல்ல பரம்பொருளே உமக்கு மனமகிழ்ச்சி அளிக்கும் ''வேல்முருகா'' ஊதுபத்திகள் இங்கு கிடைப்பதில்லை ''வேல் முருகா'' ஊதுபத்திகள் ஈழத்தில் மட்டுமே கிடைக்கின்றமையால் நான் ஈழத்தில் பிறக்க வரம் அருளும் ஐயனே!

தயாரிப்பாளர்கள்:

ஜெகஜோதி அன் கொம்பனி

குருதெனியா, கண்டி.

நேரம் காட்டும் கடிகாரத்தைப் பணம் கொடுத்து வாங்கலாம்!
நேரத்தைப் பணம் கொடுத்து வாங்க முடியுமா?
நேரத்தின் மகிமையை உணர்ந்து தயாரிக்கப்பட்டதே

# மில்க்வைற் சலவைப் பவுடர்




## மில்க் வைற் தயாரிப்புகளின் இதர பரிசு விபரங்கள்

(50 மில்க் வைற் நீல சோப் உறைகளுக்கு) ஒரு பொலித்தீன் பாக் அல்லது ஒரு பலவர்ணப் படம்

(100 மில்க் வைற் நீல சோப் உறைகளுக்கு) ஒரு கூப்பன் பாதுகாப் புப் பிளாஸ்ரிக் கவர்

0க்கு மேற்பட்ட உறைரகளுக்கு) அழகிய துவாய் ஒன்று அல்லது ஒரு டொக்குமென் பாக்

(20 மில்க் வைற் பார் சோப் உறைகளுக்கு) ஒரு கூப்பன் பாதுகாப் புப் பிளாஸ்ரிக் கவர்

(20 மில்க் வைற் சலவைப் பவுடர் உறைகளுக்கு) ஒரு கீப்பேர்ஸ் (திறப்புக் கோர்ப்பது)

(10 மில்க்வைற் நீல சோப் உறைகளுக்கு) யோகக்கலை என்னும் புத்தகம் அல்லது எம்மால் வெளியீடு செய்யப்படும்புத்தகங்களில் ஒன்றை இனுமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற் குறிப்பிட்டபடி மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறை களை மில்க்வைற் வியாபார வான்களில் அல்லது மில்க்வைற் காரி யாலயத்தில் அல்லது தபாலில் அனுப்பி இலவசப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மில்க்வைற் சோப் தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: மில்க்வைற்

கிளை: மில்க்வைற் டிப்போ, 83, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13

முதலாளி:- என்னப்பா! காவலாளி வேலைக்கு ஆள் எடுத்தாகி விட்டது என்றால் கொஞ்சம் சரி யோசியாமல் வேலை தரும்படி கேட்கிறுயே.

வந்தவன்:- நீங்கதான் யோசியுங்கா. இந்த காலத் திலே காவலாளிகளையே அடித்துக் கட்டிப் போட்டு விட்டுத் திருடுகிற காலம். ஆகையால் காவலாளி க்குக் காவலா என்னைப் போடுங்கள்.

ச. ரா. பா. சர்மா,

## சுவைத்திரு

1. நான் 50000 சுருட்டுக் குடிக்கும் வரையும் 5000 போத் தில் வைன் அருந்தும் வரையும் காலன் என்னைக் கவரக்கூடாது.

—பிஸ்மார்க்

2. கள்ளுப்போத்திலைத் திற ந்து வைக்க வேண்டும். மூடி வைத்தால் வெடித்துவிடும், அது போலக் கள்ளைக் குடித்தவ னும் வாயை மூடிவைப்பதில்லை. மூடி வைத்தால் வயிறு வெடி த்து விடுமோ என்ற பயமோ தெரியவில்லை.

—திக்கத்தான்

3. பொய்யான இந்த உடம் புக்கு மெய் எனப் பெயர் வைத் தவன் ஒரு பொய்யனேயாகும்.

—பொய்யன்

4. தமிழில் இல்லாதன இல்லை இளங்குமரா என்ற கிழட்டுத் தத் துவம் ஒழிய வேண்டும்.

—புதுமைபித்தன்

5. ''சிரிக்கத் தெரியாத சிறு பிழையால் மரித்துள்ள மாந்தர் பலர்''.

—வான்கோழியார்.

# காவோலை சிரித்தது

—கோ. இளையதம்பி

வானத்தையே தாங்கி நிற்கி றேன் என்ற பெருமையில் அந் தப் பனை மரம் உயர்ந்து வளர்ந்து நின்றது பசிய ஓலை கள் பல அதன் உச்சியில் எது வித அச்சமுமின்றி உலக நட படிகளை உற்று நோக்கிய வண் ணமிருந்தன பசிய நினைவலைகள் அவற்றின் எதிர்காலத்தை சிந் திக்க இடமளிக்கவில்லை. ஆனால்............

நீண்டு நெடுகி வளர்ந்திருந்த மங்கல் நிறமான மட்டைகளில் இருபுறமும் கூரிய வாள் போன்று அமைந்திருக்கத கருக்கு கள் இருக்கும்வரை எமக்குப் பயமே இல்லையென்ற நினைவு போலும். பாதுகாப்புடன் கூடிய அந்த நீட்டு மட்டை களின் உதவியுடன் அங்குமிங்கும் அசைந்தாடி என்ன நடைபெறு கிறதென்பதை அறியத் துடி யாய் துடித்துக்கொண்டிருந் தன.

அவற்றோடு.........தன் தோற் றமே இழந்து, நிறமும் வேறுகி அந்தப் பசிய ஓலைகளின் பாதத் தையே தஞ்சமாகக் கொண்டு வரண்டதன் உடலை அசைத்துக் கலகலவென ஓசை எழுப்பிக் கொண்டு தன் முடிவு காலத்தை எதிர் நேர்க்கிக்கொண்டிருந்தது அந்தக் கிழட்டுக் காவோலை. அதன் போக்கு அந்த இளம் ஓலைகளுக்குப் பிடிக்கவில்லை. சப்தம் செய்யாதே என்று பல முறை அவை எச்சரித்தும் அது கேட்கவில்லை. அவற்றின் போக் குப் பிடிக்காததுதான் கார ணமோ என்னவோ!

ஒரு நாள் அந்தக் காவோலை அமைதியாகப் பேசியது. ''சோத ரங்களே! நானும் ஒரு நாள் உங்களைப் போன்று உல்லாச வாழ்க்கை வாழ்ந்தேன்; பெருமை பேசினேன். ஆனால் அவை அதிக நாள் நீடிக்க வில்லை. முதுமை வந்தது. என் அழகை பறித்தது இந் நிலையை எனக்களித்தது'' என்று கூறி முடிக்குமுன்னே அந்தப் பசிய ஓலைகளின் மத்தியில் உலகை எட்டிப்பார்ப்பது போல் வெளி வந்து கொண்டிருந்த குருத் தோலை காவோலையின் இப்பேச் சைக் கடிந்து கொண்டது.

கிழட்டு அசடே! மூடு உன் வாயை எம் காலடிகளில் தஞ் சம் புகுந்திருக்கும் உனக்கா இவ் வளவு கர்வம் வந்தது? அதோ பார்! பூமித்தாய் உன் உடலைச் சுவைக்கக் காத்திருக்கிறாள், சீக் கிரம் எம்மை விட்டுப் பிரிந்து போய்விடு; நீ இங்கிருப்பதால் எமக்கு நிம்மதியேயில்லை. அந் தக் குருத்தோலை சொல்வதை ஏற்றுக்கொள்வது போல் ஒரு முறை காற்றில் அசைந்தாடி யது காவோலை அப்போது......

பன்னக்காரப் பொன்னுச்சி பனையடிக்கு வந்தாள். கணவனை அழைத்து அதோ! இருக் கிறதோ அந்தக் குருத்தோலை (சார்வு) அதை வெட்டி. விட்டால் இரண்டு பெட்டிகள், இழைத்துவிடலாம் என்றாள். அதற்குள் அவன் மனையாழுக்கு மறுவார்த்தை பேசாது அந்தப் பனையில் ஏறினான். கூரிய கத்தி கொண்டு அந்தக் குருத் தோலையை வெட்டி வீசினன் ஓ...ஓ...வென்று அலறியபடி பூமித்தாயைத் தஞ்சமடைந்தது அந்தக் குருத்தோலை பொன் னுச்சி அதை எடுத்து இரண் டாக வெட்டினாள் சர் என்ற ஓசை வெண்மையான அந்த ஓலையை வெயிலில் உலரவிட் டாள். ''இளங்குமரனே உன் கர்வம் எங்கே'' என்று கேட்பது போல் அந்தக் காவோலை அசைந்தாடியாது. வெயிலில் கிடந்து வேகும் அந்தப் பச்சிளம் பாலகனைக் கண்டு ஏனைய ஓலை கள் அனுதாபம் தெரிவிப்பது போல் அமைதியாக விருந்தன. சுடுவெயிலில் துடியாய்த்துடித்த குருத்தோலையின் நிலைகண்டு உள்ளூர இரக்கம் இருந் தாலும் ஏனையவற்றுக்கும் ஒரு புத்திபுகட்டவிகும்பி கலகல என்று சிரித்துக்கொண்டே யிருந்தது காவோலை.

---

## கண்ணோட்டம்

ஆசிரியர்:- ''கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்'' அஃதின் றேல் புண்ணென்றுணரப் படும்'' என்ற குறளிலே ''கண்ணோட்டம் என்றால் என்ன என்று தெரியுமா?

மாணவர்:- கண்ணோட்டம் என் றால் அங்கும் இங்கும் கவன மாகப் பார்த்தல் என்பது கருத்து.

ஆசிரியர்:- தப்பு, தப்பு கண்ணோ ட்டம் என்றால், தயவு, தாட் சண்யம் என்று பொருள் படும்.

மாணவர் இல்லைசார், நான் சொன்ன கருத்துத்தான் சரி யாக இருக்க வேண்டும், ஏனென்றால், காதலைப் பற்றி வள்ளுவர் நிறையத் தெரிந்து வைத்திருக்கிறார். கண்ணோடு கண்ணினை நோக் கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பய னுமில என்றுஅவரே சொல் லிவைத்திருக்கிறார். எனவே கண்ணோட்டம் என்பது காதலோடு தொடர்பு பட்ட செயல்தான்

# பாரதியாருடன் ஒரு நாள்

இ. இராசரத்தினம்

மேசை மீது கிடந்ததைப் பார்த்தேன். பாரதி பாடல். புத்தகத்தின் அட்டையில் கம்பீரமான மிடுக்குடன் தலைப்பாகை சகிதம் கம்பீரமாக பாரதியார் காட்சியளித்தார்.

படத்தில் மீசையைப் பார்க்கவே பயமாக இருக்கிறது என்றால், ஆளை நேரிலே பார்த்தால் .........ம்... ஆள் பொல்லாத பேர்வழிதான்! இல்லையென்றால் ''காலா உன்னை நான் சிறு புல் என்று மதிக்கின்றேன். என் காலருகே வாடா, உன்னை மிதிக்கின்றேன்'' என்று பாடியிருப்பாரா?

சனசமூக நிலையத்தில் நடக்கவிருக்கும் பாரதி விழாவிலே என்னையும் பாரதியைப் பற்றிப் பேசக் கேட்டிருக்கின்றார்கள். நான் என்னத்தைப் பேசுவது? இந்தப் பாரதியால் எனக்குத் தொந்தரவாய்ப் போச்சே!

பாரதி பாடலைப் பக்கம் பக்கமாகப் புரட்டுகிறேன். கையலுத்துப்போய் விடுகிறது. ''பேசாட்டில் இப்ப என்ன வழக்கே! கடைசி நேரத்திலை ஒரு சாட்டைச் சொன்னால் போச்சு'' இரவல் வாங்கிய புத்தகத்தை மூடி வைத்து விட்டு கட்டிலில் விழுந்து போர்வையை இழுத்து மூடுகின்றேன். ஆஹா!...

பாரதி என்னை நோக்கி வந்து கொண்டிருக்கின்றாரே. ஏனோ?

நானும் கிட்டப் போய் 'குட் மோர்னிங்' என்றேன்,

பாரதியார் தூய தமிழில் ''வணக்கம்'' என்று கூறிவிட்டு என்னை ஏற இறங்கப் பார்த்தார்.

நான் திடீரென்று என்னைச் சமாளித்துக் கொண்டு, 'இலங்கையிலிருந்து வந்திருக்கின்றேன்' என்றேன்.

'நல்லது நீர் தமிழன் தானோ இல்லை...?'' என்று பாரதியார் இழுத்தார்.

நான் தமிழன் தானா என்பதில் பாரதியாருக்கு ஏன் சந்தேகமோ? ''தமிழன் தான்'' என்றேன்.

''தமிழர்கள் ஆங்கிலத்தில் தான் வணக்கம் சொல்லுவார்களா? ஆங்கிலேயர்கள் தமிழில் வணக்கம் சொல்வதில்லையே'' என்றார்,

நான் எதுவும் பேசாமல் தடுமாறிக் கொண்டு கையில் வைத்திருந்த ஆங்கிலப் பத்திரிகையைப் பார்த்து ஏன் இதைக் கொண்டு வந்தேன் என்று யோசித்துக் கொண்டு நிற்கும் போது பாரதியாரே கையில் இருந்த ஆங்கிலப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு என்னை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு தமிழர்கள் எல்லாம் இப்படித்தான் தமிழ் வளர்க்கிறார்களா?' என்று கேட்டார்.

எனக்கு அவமானமாக இருந்ததால் பிரச்சினையைத் திசை திருப்புவதற்காக ''கேவலம் வீட்டில் வளர்க்கும் நாய்களுக்குக்கூட ஆங்கிலத்தில் பெயர் சொல்லி அழைக்கும் துரைமார்கள் தமிழாராய்ச்சி மகாநாடுகளைக் கூட ஆங்கிலத்தில் நடத்துகிறார்களே! அது தங்களுக்குத் தெரியாதா?'' என்றேன்.

அவர் எதிர்பாராத செய்தி திடீரென்று அதிர்ந்து விட்டார். என்னளவில் பிரச்சனையைத் திசை திருப்பி விட்டதில் பெரிய மகிழ்ச்சி.

திடீரென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு பாரதியார் ''நெஞ்சு பொறுக்குதில்லையே...'' என்று பாடத் தொடங்கினார்.

நான் எதுவும் பேசாமல் நின்றேன். பாடி முடித்து விட்டு பாரதியார் 'வேறென்னபுதினம்' என்றார்.

சற்று நேரம் எதைச் சொல்வது என்று யோசித்து விட்டு ''நீங்கள் அன்று சந்திர மண்டலத்தியல்கண்டு தெளிவோம்'' என்று சொன்னீர்கள். இன்று உங்கள் தீர்க்க தரிசனம் உண்மையாகப் போய்விட்டது. அமெரிக்கர் சந்திர மண்ணில் போய் கால் வைத்து விட்டு வெற்றியோடு வந்து விட்டனர் என்றேன்.

''சந்தோஷமான செய்திதான். ஏன் தமிழர்களும் சந்திரனுக்குப் போக முயலக் கூடாது?''

''எமது தமிழர்கள் மனிதர்களைத் தாழ்ந்தவர்கள், உயர்ந்தவர்கள் என்று தரம்பிரித்து, தாழ்ந்தவர்கள் என்று கருதுபவர்களை இந்து ஆலயங்களுக்குச் செல்லவிடாது தடுத்துவைக்கின்றார்கள். இதனால் இன்று தமிழர்களில் பலர் இந்து ஆலயங்களுக்குள் கால் வைப்பதை விடவா சந்திரனில் கால் வைப்

# கவலை ஏன்?

## இன்னும் வியாதியால் கஷ்டப்படுகிறீர்களா?
## அப்படி தீர்க்க முடியாத நோய்தான் என்ன?

**அன்பர்களே!**

எனது குடும்ப பரம்பரையாகச் செய்து வரும் சித்த ஆயுள் வேத மருந்துகள் யாவும் முறை தவறாது நோயாளியின் நாடி நிதானம், உடற்பலம், வியாதிகளின் குணங்களை நன்கு அறிந்து தகுந்த மருந்துகள் கொடுத்து பல பெரிய டாக்டர்களால் கைவிடப்பட்ட ஆஸ்மா, க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், ஒருபக்கத் தலையிடி, அஜீரணம், வாதம், பாரிச வாதம், கீழ் வாதம், பக்க வாதம், கபஜுரம், நீரிழிவு, இரத்தமின்மை, பலக்குறைவு, மூலரோகங்கள், சூன்மம், வெண்குஷ்டம், ஆனைக்கால் தாதுநஷ்டம், நரம்புத் தளர்ச்சி, பெண்களுக்கு ஏற்படும் சூதகவலி, மாதம் முன் பின் காணுதல், பிள்ளையில்லாமல் இருத்தல், சூதகம் தடைப்படுதல், குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளையும், ஏனைய பல நோய்களால் துன்புறும் வியாதிஸ்தர்களையும் பூரண குணப்படுத்தி அவர்களின் நற்சான்றுகளைப் பெற்று வருகின்றேன் என்பதை தங்கட்கு பெருமையுடன் தெரிவிப்பதுடன், ஆங்கில வைத்தியமோ, வேறு வைத்தியங்களோ செய்து தங்கள் நோய் தீரவில்லை யென்றால் என்னிடம் கடைசியாக ஆலோசனை கேட்டு சிகிச்சைபெறலாம். எனது மருந்தினால் வியாதியைக் குணப்படுத்த முடியும் என எனது மனதிற்கு திருப்திப் பட்டால் தான் சிகிச்சை செய்வேன். முடியாத நோய்களை ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஏற்றுக்கொண்ட வியாதியை நிச்சயமாகவும், திருப்தியாகவும் குணப்படுத்திக் கொடுப்பேன் என்பதை பெருமையுடன் தெரிவிக்கின்றேன். நேரில் வர வசதியில்லாதவர்கள் கடிதமூலம் எழுதி விபரம் அறியலாம்.

இலங்கை அரசாங்கத்தாரால் பதிவு செய்யப்பெற்ற

**ஆயுள்வேத டாக்டர் மு. கிருஷ்ணன்**

(ஆயுள்வேத பிஷக். வைத்தியக் களஞ்சியம்)
(கல்கத்தா) (இலங்கை) (மதுரை)
B. Sc. A. (கல்கத்தா), R. I. M. P. (இலங்கை), S. M. P. (மதுரை)

**6ம் திகதி முதல் 20ம் திகதி வரை:**

கொழும்பு 19/1 செட்டியார் தெரு (ஏ. வி. ஏ. மேல் மாடியில்)
காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை

போயா நாட்கள் வர்த்தக விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் சிகிச்சை பெறுபவர்களும் இனி பெறவிரும்புகிறவர்களும் என்னிடம் மேற்கண்ட இடத்தில் ஒவ்வொரு மாதமும் என்னை சந்தித்து சிகிச்சை பெறலாம்.

# வதனகாந்தி

## (முகப்பரு மருந்து)

உங்கள் அழகிய முகங்களைக் கெடுத்து விகாரப் படுத்தும் பருக்கள், கரும் புள்ளிகள், தழும்புகள், வங்கு ஆகியவைகளை மாயமாக மறையச் செய்து முக வசீகரத்தை தரவல்ல பல அரிய மருந்துகளால் தயாரிக்கப் பெற்றது.

**விலை தபாற் செலவுடன் ரூ. 3-50**

**இடைக்குமிடம்:**

**கலா நிலையம், 19/1, செட்டியார் தெரு, கொழும்பு-11**

பது கஷ்டம்? என்று கேட்கின்ருர்கள்.''

பாரதியாரின் கண்கள் சிவந்து விட்டன. உடனே சாதிகள் இல்லையடி பாப்பா...'' என்று பாடத் தொடங்கி விட்டார்

திடீரென்று நான் வைத்திருந்த 'ரான்சிஸ்டர்' ரேடியோவைக் கவனித்த பாரதியார் ''உது என்னப்பா'' என்ருர்.

''நீங்கள் அன்று காசிநகர்ப் புலவோர் பேசும் உரை தான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்......'' என்று பாடினீர்கள் அல்லவா இது தான் அந்தக் கருவி இதை நாங்கள் தமிழில் 'வானெலிப் பெட்டி' என்று அழைக்கின்ருேம்.

அவரது முகத்தில் இனம் புரியாத சந்தோஷம் பரவி இருப்பதை இப்போ என்னுல் அவதானிக்க முடிந்தது.

பாரதியார் ப்ரா ர் வையில் அவர் அதை இயக்கிப் பார்க்க ஆசைப்படுகின்ருர் என்பதைத் தெரிந்து [கொண்டு 'விசை'யை முறுக்கினேன். ஒரு தமிழ்ப் பாட்டு ஒலித்தது.

''......பெண்ணேடு நயணைத் துப் பார்த்ததில்லேயோ........''

பாரதியார் முகத்தைச் சுளிப்பதைப் பார்த்து, இது ஒரு கவிதை என்றேன்.

''இது வேண்டாம், வேறு ஏதாவது போடு'' என்ருர்.

திரும்பவும் விசையை முடுக்கி வேறு நிலையத்திற்கு மாற்றினேன். அங்கிருந்தும் ஒரு தமிழ் பாட்டுத்தான் ஒலித்தது.

''கொஞ்ச நேரம் கன்னத் தோடு கன்னம் வைத்துக் கொஞ் சவா.........''

''போதும் நிறுத்து என்ன இவையெல்லாம் கவிதைகளா?

''இவையெல்லாம் கவிதைகள் தான். இப்படியாக எழுதுபவர்களுக்குத்தான் இன்று பொன்னுடையும் புகழும். இது தான் இன்றைய தமிழனின் நிலையும் கூட'' என்றேன்.

நிமிர்ந்து பாரதியாரது முகத்தைப் பார்த்தேன். கோப உணர்ச்சிகள் முகமெங்கும் கோடிழுத்து......, கண்கள் இரத்தம் போலாகி...... எனக்குப் பயமாக இருந்தது. இனியும் நின்ருல் என்ன நடக்குமோ என்றஞ்சிப் புறப்படுவதற்காக 'குட்பை' என்றேன்.

'குட் மோர்னிங், குட்பை என்று இன்னும் ஒருமுறைசொன்ஞய் என்ருல் உன்னை என்ன செய்வேன் தெரியுமா? உங்களைப் போன்றவர்களால்தான் தமிழ்த் தாய் இன்று மானமிழந்து......' அடிப்பதுபோல ஆவேசத்துடன் கத்தினுர் பாரதியார்.

நான்பயந்து நடுநடுங்கி, 'மன்னித்துக் கொள்ளுங்கள். இனி மேல் மறந்துங்கூட சொல்ல மாட்டேன் சொல்......

''என்ன வாய் புலம்புறியள் கனவு கண்டனீங்களே?'' எனது மனைவியின் குரல் காதைத்துளைத்தது.

கண்களைக் கசக்கிக் கொண்டு விழித்துப் பார்த்தேன். மேசையில் கிடந்த பாரதியார் பாடல் காற்றுக்கு விரிந்து கிடந்தது. ★

## பூ இவ்வளவு தானு?

காந்திஜி ஒரு முறை ஷிமோகாவுக்குப் போயிருந்த போது காகா காலேல்கர் அவரைப் பார்த்து 'தாங்கள் கெரஸப்பா நீர்வீழ்ச்சியை அவசியம் பார்க்க வேண்டும், அதைப் பார்ப்பதற்காக வென்றே முன்பு லாட் கர்ஸான் இந்தப் பக்கமாக வந்தாராம். தாங்கள் அவசியம் அதை பார்க்க வேண்டும்' என்ருர்.

''எனக்கு வேலை நிறைய இருக்கிறதே'' என்ருர் காந்திஜி

'தங்களுக்கு எப்போதும் வேலை இருந்து கொண்டேதான் இருக்கும். இவ்வளவு சமீபத்தில் வந்த பிறகு அதைப் பார்க்காமல் போகக் கூடாது. உலகத்திலேயே அற்புதக்காட்சி அது. கெரஸப்பா நீர் வீழ்ச்சி, நயாகரா நீர்வீழ்ச்சியை விட உயரத்திலிருந்து தண்ணீர் விழுகிறது'' என்று காலேல்கர் மீண்டும் வற்புறுத்தினுர்.

''பூ, இவ்வளவு தானு? மழைத் தண்ணீர் ஆகாயத்திலிருந்து கொட்டுகிறதே; அதை விடவா இது ஆச்சரியம்!'' என்ருர் காந்திஜி.

**பள்ளிப் பகிடி:**

அனுப்பியவர்:-

திரு. பொ. திருலிங்கம்,

திருநெல்வேலி.

கருத்துக்கு
விருந்து!

மாதமொரு இதழ்
விரித்து
மணம் பரப்பும்
கலை இலக்கியஇதழ்


# ரோஜாப்பூ

இன்றே படியுங்கள்

# பதவியும் தகுதியும்

காட்டெலி, நாட்டெலி, வீட்டெலி, மோட்டெலி, நகரெலி, சுண்டெலி, பெருச்சாளி, மூஞ்சூறு எல்லா எலிகளும் கூட்டம் கூட்டமாகவந்து சேர்ந்தன. எல்லா வாசலில் நின்று பொந்துக்கு வெளியே தெரியும் வாலைக் கடித்திழுத்துத் தொந்தரவு கொடுக்கும் கீரி வம்சத்தை அடியோடு ஒழித்துக்கட்டவே இப்படியொரு படையைத் திரட்டின. ஆவேசத்துடன் சில எலிகள் பேசித் தீர்த்ததும் ஆரவாரத்துடன் எலிக் கும்பல்கள் புறப்பட்டன. கீரிகளின் கூட்டத்தின் மீது எல்லாம் பாய்ந்தன; கடித்தன. மனிதப் படையே நடுங்கும் நச்சுப் பாம்பை கடித்துக் கொன்று விடும் கீரிகளுக்குஇந்த சுண்டைக்காய் கூட்டம் எம்மாத்திரம்? தாக்குப்பிடிக்க முடியாமல் எலிகள் தான் மண்டையைப் போட்டன. கீரிகளில் ஒன்றுவது படுகாயத்தோடு மண்ணில் சாயவேண்டுமே; அதுதான் இல்லை. எலிகளுக்கோ பலத்த உயிர்சேதம் ஏற்பட்டது. எனவே பின் வாங்க வேண்டிய கட்டாயம் உண்டாகி விட்டது. செத்த எலிகளின் தொகையைப்பார்த்ததுமே' கதிகலங்கிப் போய் சில எலிகள் ஏற்கனவே தமது இருப்பிடத்தில் போய் பதுங்கிக் கொண்டன.

பின் வாங்கிய எலிகளின் மனதில் தோல்வியின் அவமானம் பொருமிக் கொண்டிருந்தது. ஒரு கீரியையாவது கொன்று வீர சொர்க்கம் அடைய வேண்டும் என்று துடித்தன. சில எலிகள் தங்களின் பலத்த தோல்விக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தன. அப்பொழுது நாட்டெலி ஒன்று மனிதர்கள் எப்படி யுத்தம் செய்வார்கள் என்பதைப்




பற்றி விவரித்தது. படைக்குத் தலைமை தாங்கும் தளபதி ஒருவர் கட்டாயம் தேவை யென்றும் இவருடைய வழி நடத்துதலாலேயே வெற்றி கிடைப்பதாகவும் சொல்லியது. இந்தக் கருத்தை வீட்டெலி, மோட்டெலி, நகரெலிக் கூட்டங்கள் உண்மைதான் என்று ஒத்துக்கொண்டன.

இவ்வளவு எலிகளும்ஆமாம் சாமி போடும் பொழுது அதன் படி நடக்க வேண்டாமா?

ஒவ்வொரு எலிச் சாதிக்குள்ளும் ஒவ்வொரு படைத்தளபதி தேர்ந்தெடுக்கப்பட்டது. இதுதான் தளபதி என்று பார்த்தவுடனே புரிந்து கொள்ள வேண்டுமே ஆகவே தளபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு எலியின் தலையிலும் கொம்பு போல் நீண்டு கொண்டிருக்கத் தக்கதாக ஒன்றைப் பொருத்தி விட்டன. அந்தக் கொம்போ எப்படித் தான் அசைத்தாலும் ஆட்டம்காணுது.

அது மட்டுமா? பிடுங்கி எடுப்பது கூட சுலபத்தில் சாத்தியமாகக் கூடியது மல்ல. அவ்வளவு இறுக்கமாக ஒட்டப்பட்டிருந்தது.

எலிப் பட்டாளம் தளபதியின் கட்டளை யோடு புறப் பட்டது. வெள்ளம் போல் கூட்டம் இருப்பதைக் கண்டதும், வெற்றி

---

ஆசிரியர்;- டேய் ராமு! சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் எங்கே கையெழுத்திடப்பட்டது?

ராமு:- ஒப்பந்தப் பத்திரத்தின் கீழ் பாகத்திலே சார்.

---

தமக்குத்தான் என்று எலிப் பட்டாளம் எண்ணிக் கொண்டது. ஆனல் இந்த எண்ணத்தில் இடி விழுந்தது போலாகிவிட்டது கீரிகளின் பெருக்கம். என்றாலும் தளபதியின் தைரியத்தில் எல்லாம்பாய்ந்தன. பாவம்இரத்தம் கொப்பளிக்க கீச்சிட்டு விழுந்து மாண்டனவே தவிர, கீரிப்பிள்ளைகளை எதிர்த்து நிற்கமுடிய வில்லை. வெற்றி கிடைக்காது வீணகஉயிர்தான் போகும்என்று கண்ட எலிகள் எல்லாம் தப்பித்தோம் பிழைத்தோம் என்று பின் வாங்கி ஓடிப்போய் பொந்துக்குள் பதுங்கிக் கொண்டன. தளபதிகளும் நாலுகால் பாய்ச்சலில் பறந்தன. ஆனல் பொந்துக்குள் நுழைய முடியாமல் தவித்தன. தலையில் பொருத்திவிட்ட கொம்புகளால்தான் இந்த கதி! தப்புவதற்கு வழியின்றி தவித்த தளபதி எலிகளை கீரிப் பிள்ளைகள் கடித்துக் குதறிக் கொன்றன.

நீதி: பதவிவழங்கிவிட்டால் மட்டும்ஒருவனுடைய வல்லமை உயர்ந்து விடப் போவதில்லை.

# மாணவி மகேஸ்வரி

மகேஸ்வரி அம்மாவுக்கு ஒரே ஒரு பிள்ளை. அம்மா அவள் மீது உயிரையே வைத்திருந்தாள், அளவுக்கு மீறி செல்லம் கொடுத்திருந்தாள். கேட்டதையெல்லாம் உடனுக்குடன் வாங்கிக் கொடுப்பாள். மகேஸ்வரியின் முகம் கொஞ்சம் சிணுங்கினுல் போதும். அம்மா துடிதுடித்தே போவாள். அவள் என்ன தவறு செய்தாலும் கண்டிப்புக் கிடையாது. லேசாக ஒரு தட்டுக் கூட தட்டியிருக்கமாட்டாள், மகேஸ்வரியின் இஷ்டப்படியே வளர்த்தாள். இதனுல் படிப்பில் அவ்வளவு தூரம் அக்கறை காட்டவில்லை. வகுப்பில் அவள் தான் கடைசி.

கணக்குச் செய்து அவள் ஒன்று கூட சரிவாங்கியது கிடையாது. எழுத்தையாவது அழகாக முத்து முத்தாக எழுதுவாளாஎன்ருல் இல்லை. கோணல் மாணலாக கோழி கிண்டியது மாதிரி கிறுக்கி வைப்பாள். பாடப் புத்தகத்தை மளமளவென்று வாசித்தது கிடையாது. தட்டுத் தடுமாறி, திக்கித் திக்கி வாசிப்பாள். சொற்களை ஒழுங்காக உச்சரிப்பதும் கிடையாது. பாடம் தொடங்கினுல் குரல் சுருதி ஏறியும் இறங்கியும் போகும். இப்படியானவள் வகுப்பில் எப்படி இருப்பாள்?

அம்மா இதையிட்டு ஏசியது பேசியது கிடையாது. 'நீ முயற்ச்சி பண்ணினுல் முடியாதது ஒன்று மில்லை மகேஸ். மற்றவர்களைப் போல் படிக்க முடியவில்லையே என்பதற்காக கவலைப்படாதே, படித்துப் பாசாக வேண்டுமென்பதில்லை. ஏதோ நாலு எழுத்து வாசிக்க எழுதத் தெரிந்தால் போதும்! நீ ஒன்றுக்கும் யோசிக்காதே' என்று சமாதானமாக ஆயிரம் வார்த்தைகள் சொல்லுவாள்.

மகேஸ்வரிக்கு இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இருந்த கவலையெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விடும். ஒரு துளி கவலைகூட இல்லாமலிருக்கும் மகேஸ்வரிக்கு வருடத்தில் ஒரே ஒரு நாள் தான் தாங்க முடியாத கவலை பொங்கி விடும். அதுதான் பரிசளிப்பு நாள். அன்றைய தினம் அவளுடைய வகுப்பு மாணவிகள் எப்படியும் ஆளுக்கொரு பரிசைத் தட்டிக் கொள்வார்கள். பரிசு பெறும் பிள்ளைகளின் பெற்ருேர்கள் அன்றைய தினம் வந்திருந்து பார்த்து பூரிப்படைவார்கள். என்னுடைய அம்மாவை ஒரு முறையாவது பூரிப்படைய வைக்கவில்லையே என்ற உள்ளூர மகேஸ்வரிக்கு மிகவும் கவலைதான். கணக்கு, எழுத்து, வாசிப்பு, சங்கீதம் என்று ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு பிள்ளைகளாக மேடை மீது வந்து பரிசு பெற்றுக் கொண்டு போவார்கள். மகேஸ்வரியோ இருந்தஇடத்தை விட்டு எழுந்ததே கிடையர்து. பரிசு இருந்தால்தானே எழும்ப சந்தர்ப்பம் கிடைக்கும்.

பரிசளிப்பு விழா முடிந்து வீட்டுக்கு வந்த மகேஸ்வரி கேவிக் கேவி அழுதாள். ஒரு முறையாவது பரிசு பெற்று அம்மாவைச் சந்தோசப்படுத்த வில்லையே என்பதை எண்ணி எண்ணித்தான் இப்படி விம்மி விம்மி அழுதாள்.

''மகேஸ்! ஏனம்மா அழுகிருய்? என்ன நடந்தது?'' என்று தலையைத் தடவியவாறே அம்மா கேட்டாள்.

''ஒரு பரிசாவது பெற்று உன்னைச் சந்தோஷப் படுத்த முடியவில்லையே அம்மா'' என்று சொல்லி அழுதாள்.

''மகேஸ்! நீ வகுப்பில் கெட்டிக்காரி இல்லைதான். கஷ்டப்பட்டு படிக்கும் பழக்கமோ வழக்கமோ உன்னிடம் இல்லைத் தான். எவ்வளவுதான் முயன்ருலும் உன்னுல் கெட்டிக்காரியாக வரமுடியாது தான். ஆனுல் நீ நினைத்தால் ஒரேயொரு விஷயத்தில் மட்டும் நிச்சயமாக முதலிடம் வகிக்கமுடியும்'' என்ருள்.

''என்னவிஷயத்தில் அம்மா?'' என்று கண்களைத் துடைத்தவாறே கேட்டாள்.

''நீ நல்ல பிள்ளை என்று பெயரெடுக்கலாம். எல்லாப்பிள்ளைகளும் உன்னுேடு அன்பாக இருக்கத்தக்கதாக பழகினுல் நான் சந்தோஷப்படுவேன். புத்திசாலிகளான பிள்ளைகள் ஏராளமாக இருக்கலாம். ஆனுல் அத்தனை பேரும் நல்ல பிள்ளைகளாக இருக்கமாட்டார்கள். நல்ல பிள்ளை என்று பெயரெடுப்பது மிகவும் கஷ்டம் மகேஸ், அந்தப் பெயரை நீ எடுத்தால் ஆனந்தப்படுவேன், பூரிப்படைவேன் கண்ணே'' என்று அம்மா சொன்னுள்.



''அம்மா, நீங்கள் சொன்னதைப் போலவே பெயர் எடுப்பேன், சந்தோஷப்படுத்துவேன் என்று உணர்ச்சியோடு சொன்னவள் வைராக்கியம் கொண்டாள். அப்படியே நடக்கத் தொடங்கினுள். இந்துமதி பென்சில் சீவ கட்டர் கேட்டால், மகேஸ்

வரி பென்சிலை வாங்கி பக்குவமாகச் சீவிக் கொடுப்பாள். சரோஜா இரேஸரைத் தொலைத்து விடவே, தன்னுடைய ரப்பரில் பாதியை பிளேடினால் வெட்டிக் கொடுத்தாள். தன்னிடமிருக்கும் பிஸ்கட்டைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பாள்.

தன்னுடைய வீட்டுவாசலில் வளர்ந்திருக்கும் ரோஜாச் செடியில் பூத்திருக்கும் பூக்களை தினந்தோறும் தவறாது கொண்டுவந்து விஜயலட்சுமி டீச்சர் கையில் கொடுப்பாள். டீச்சர் தன்னுடையகூந்தலில் வைப்பதை பார்த்து மகிழ்வாள்.

''மகேஸ் உன் குணம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. படிப்பில் நீ கடைசிப் பிள்ளைதான். என்றாலும் உன் குணத்தில் முதலிடம் வகிக்கிறாய்'' என்று அன்போடு நாடியைப் பிடித்துப் தடவினார்.

மகேஸ்வரி தன்னாலான உதவிகளைச் செய்வதில் எப்போதும் முன்னிப்பாள். கீழே விழுந்த பிள்ளைகளை உடனே ஓடிப்போய் தூக்குவாள். அழுதால் கண்ணீரைத் துடைத்து விடுவாள். காயம்பட்டுவிட்டால், கட்டு கூடப் போட்டு விடுவாள். கதவிடுக்கில் கைவிரல் அகப்பட்டு விட்டால் அல்லது புத்தகத்தை வைத்து மேசையை மூடும் பொழுது கைவிரல் அடிபட்டு விட்டால் மகேஸ்வரியை நோக்கித்தான் பிள்ளைகள் ஓடுவார்கள். அவ்வளவு தூரத்துக்கு அவளுடைய நல்ல குணம் பரவிவிட்டது.

வழக்கம் போலத் தவணையும் வந்தது. பரீட்சை தொடங்கும் சமயமும் ஆகியது. எல்லாப் பிள்ளைகளும் சோதனையைப் பற்றியும், புள்ளிகளைப் பற்றியும், பரிசுகளைப் பற்றியுமே பேசினர்.

''இந்தமுறை கணக்கில் நான் தான் முதற்பரிசு பெறுவேன்'' என்றாள் ஹெலன் டொரீன்.

''அழகான எழுத்துக்கு இந்த முறையும் நான்தான் பரிசு பெறுவேன்'' என்றாள் காந்திமதி.

''விஜயலட்சுமி டீச்சர் சொன்னுங்க, இந்த முறையும் நான் தான் வாசிப்பில் முதற்பரிசு தட்டுவேன் என்று'' எனப் பெருமையாகச் சொன்னாள் டெடோனா.

இவர்களுடைய பேச்சையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மகேஸ்வரி வாயைத் திறக்கவில்லை. தனக்கு ஒரு பரிசுமே கிடைக்காது என்பது தான் அவளுக்கு நன்றாகத் தெரியுமே. போனவருஷம் மகேஸ்வரிக்கு ஒரு பரிசுமே கிடைக்கவில்லை என்ற போது கூட்டமாக கூடி நின்று சிரித்தார்கள். ஆனால் இந்த முறை அவர்கள் மகேஸ்வரியைப் பார்த்து சிரிக்கவில்லை பரிதாபமாகப் பார்த்தனர்.

''மகேஸை எனக்கு ரொம்பவும் பிடிக்கும்'' என்றாள் ஹெலன் டொரீன்,

''பாவம் டொரீன்! மகேஸ் அவளுக்கு ஒரு நாளாவது ஒரு பரிசாவது கிடைத்ததே இல்லை. பரிசளிப்புத் தினத்தில் அவளுடைய அம்மாவுடன் பக்கத்தில் இருக்கும் பொழுது எனக்குப் பார்க்கப் பாவமாக இருக்கும். இந்த முறை பரிசு பெறுதவர்கள் போன முறையாவது பெற்றிருப்பார்கள். போனமுறை பெரு




புடவைத் தினுசுகளுக்கு

'சிங்காரம்ஸ்'

தங்க நகைகளுக்கு

டைமா நகைமாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு: 11

தொலைபேசி: 20875

தவர்கள் இந்த முறை பெற்றிருப்பார்கள்? ஆனால் மகேஸோ ஒரு முறையாவது எடுக்கவில்லையே. இதை நினைத்தால்தான் எனக்கு கவலையாக இருக்கிறது'' என்றாள் காந்திமதி.

மாணவிகள் எல்லாரும் மைதானத்தில் கூடி நின்று மகேஸ்வரியைப் பற்றி கதைத்த வண்ணமிருந்தனர். அவளைப் பார்த்துப் பார்த்துப் பேசினர். சுட்டிக்காட்டிக் கதைத்தனர், தன்னைப் பற்றித்தான் பேச்சு நடக்கிறது என்பதை மட்டும் அவளால் புரிந்து கொள்ளமுடிந்தது. ஆனால் எதையிட்டுக் கதைக்கிறார்கள் என்பதைதான் கண்டு கொள்ள முடியவில்லை. என்னவாக இருக்கும் மென்று தெரிந்து கொள்ள கிட்டப்போன போது அவளை வர வேண்டாம் என்று சொல்லி விட்டனர்.

''கடவுளே என்னைப் பற்றி என்ன கதைக்கிறார்கள் என்று எனக்கே புரியவில்லையே'' என்று அழாக் குறையாக நினைத்து வருத்தப்பட்டாள்.

மகேஸ்வரியை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டுமென்ற நோக்கத்தில் அவர்கள் திட்டமிடுகிறார்கள் என்பது அவளுக்கே தெரியாது.

''ஆளுக்கு இருபந்தைந்து சதமாக கொண்டு வந்து விஜயலட்சுமி டீச்சரிடம் கொடுத்து மகேஸ்வரிக்கு ஒரு பரிசு கொடுக்கச் சொல்லுவோம்என்று சொல்லிக் கொண்டார்கள்.

''அவளுக்கு எதற்குப் பரிசு கொடுக்கலாம்? அவளுக்கு தையலும் வராது, விளையாட்டும் வராது, எதுக்குக் கொடுக்கலாம் என்று இந்துமதி கேட்டாள்.

''அவளுடைய தயாள குணத்துக்கு பாராட்டி நல்லபிள்ளை என்று பட்டம் கொடுத்து பரிசு வழங்கலாம்'' என்று கருத்துச் சொன்னாள் சரோஜா.

''அது நல்ல ஐடியாதான்'' என்று அன்னலட்சுமி ஆமோதித்தாள்.

எல்லா பிள்ளைகளும் விஜயலட்சுமி டீச்சரிடம் சென்றனர். இதைப்பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ளாத மகேஸ்வரி மனவருத்தத்தோடு சென்றாள், என்னைப் பற்றி அப்படி என்னதான் கதைத்திருப்பார்கள் என்று யோசித்துப் பார்த்தாள். அவளுக்கு ஒன்றுமே தட்டுப்படவில்லை. பரிசு கொடுக்கும் வரைக்கும் மகேஸ்வரியின் காதுக்கு இந்த விஷயம் எட்டவே கூடாது என்று எல்லோரும் முழுமனதாக தீர்மானித்துக் கொண்டனர்,

டீச்சரிடம் தங்களுடைய எண்ணத்தை வெளியிட்டனர். 'அருமையான திட்டம், என்று வாயாரப் புகழ்ந்த டீச்சர், 'காசைக் கொண்டு வாருங்கள்.

குஞ்சு மயில்:- அப்பா என் நாட்டிய அரங்கேற்றம் எப்ப?

தகப்பன் மயில்:- அரங்கேற்ற விழாவிற்கு மலர் வெளியிட வேண்டுமே! அதற்கு விளம்பரம் தேட எங்கே போறது. அரங்கேற்றம் பணக்கார வீட்டு விஷயம்.

ஜோக்ரடீஸ்

என்ன வாங்கிக் கொடுக்கலாம் என்பதை முடிவாகச் சொல்கிறேன்' என்றார்.

பிள்ளைகள் மகேஸ்வரியின் காதில் இந்தத் திட்டம் விழாதவாறு ரகசியமாக வைத்துக் கொண்டதுடன், பணத்தையும் பேச்சு மூச்சில்லாமல் கொடுத்தனர். விஜயலட்சுமி டீச்சரும் காசைக் கணக்குப் பார்த்துக் கொண்டார். பணமும் தொகையாகச் சேர்ந்து விட்டது.

'டீச்சர்' மகேசுக்கு வாசிக்க அவ்வளவாக வராது, அதனாலே புத்தகம் வாங்கிக் கொடுத்துப் பலனில்லை. விளையாட்டு வகையும் பிடிக்காது! ஆனால் பொம்மை என்றால் மிகவும் பிடிக்கும். என்று அன்னலட்சுமி சொன்னாள். மகேஸ்வரியோடு பள்ளிக்கூடம் விட்டதும் பாதி தூரம் வரை அன்னலட்சுமி தினமும் நடந்து போவதுண்டு. அதனால் அவளுடைய மனதை நன்கு புரிந்து வைத்திருந்தாள் அன்னலட்சுமி.

''நல்ல யோசனை தான். அன்னலட்சுமி நீயே என்னோடு வா. அழகான பொம்மையாகப் பார்த்து வாங்குவோம்'; என்று டீச்சர் சொன்னாள்.

டீச்சரும், அன்னலட்சுமியும் மத்தியானம் பள்ளிக்கூடம் விட்டதும் பொம்மைகள் விற்கும் கடைக்குப் போனார்கள். பாப்பா பொம்மை ஒன்றைப் பார்த்தனர், சிரித்த முகத்தோடு இருந்த அந்தப் பொம்மைக்கு அழகான சட்டையும் போடப்பட்டிருந்தது.''

''டீச்சர் மகேசுக்கு இந்தப் பொம்மை என்றால் மிகவும் பிடிக்கும்'' என்று ஆர்வத்தோடு சொன்னாள் அன்னலட்சுமி,

''அந்தப் பொம்மை பதினைந்து ரூபாய் என்று போட்டிருக்கு, கையில் இருப்பதோ பதினைந்து ரூபாய் தானே'' என்று சொன்ன டீச்சர், 'என் பங்காக ஒரு ரூபா போட்டுக் கொள்கிறேன்'' என்று கடைக்காரனிடம் பதினைந்து ரூபா கொடுத்தார்.

பொம்மையை பெட்டிக்குள் வைத்து கடைக்காரர்கொடுத்தார். அன்னலட்சுமி அதை வாங்கிக் கொண்டு நடந்தாள். பள்ளிக்கூட மாணவிகளுக்குக் காட்டினாள். எல்லோருக்கும் வெகுவாய் பிடித்திருந்தது.

''அம்மா நாளைக்குப் பரிசளிப்புத் தினம். எனக்கு உங்களைச்

சந்தோஷப்படுத்த முடியாமலிருப்பதையிட்டுத்தான் மிகவும் கவலை இருந்தாலும் நாளைக்கு பரிசளிப்பு விழாவுக்குப் போகலாமென்றிருக்கின்றேன். அம்மாவும் வருவீங்களா? இல்லையென்றால் எதற்கு வீணைகப் பொழுதைக் கழிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?'' என்று மகேஸ்வரி கேட்டாள்.

''அப்படியெல்லாம் நினைக்கவில்லை மகளே! பாட்டுப் போட்டியில் பரிசு பெற்ற பிள்ளை பாடுவதைக் கேட்க எனக்கு எவ்வளவு விருப்பம் தெரியுமா? என்று அம்மா சொன்னார். மகேஸ்வரியின் மனம் நொடிந்து விடக் கூடாது என்பதற்காக சொன்னார்.

''அம்மா எல்லாப் பிள்ளைகளும் என்னைப் பார்த்து என்னைச் சுட்டிக் காட்டி என்ன வென்னவெல்லாமோ பேசினர். எல்லாரிடமும் அன்பாகப் பழகுவதை நினைத்து கேலியாகப் பேசியிருப்பார்களோ?''

''இல்லை, அப்படியெல்லாம் இருக்காது. யார் என்னதான் பேசினாலும்சரி, நீ உன்போக்கை விட்டு விடாதே. இன்று போலவே என்றைக்கும் நடந்து வா'' என்று அம்மா புத்திமதி சொன்னார்.

பரிசளிப்புத் தினம் வந்தது. பிள்ளைகள் வாழ்த்து பாடினார்கள்; பாட்டிசைத்தார்கள்; ஆடினார்கள். தலைமை ஆசிரியை சொற்பொழிவாற்றினார். விஜயலட்சுமி டீச்சர் கூட இரண்டொரு வார்த்தைகள் பேசினார். வந்திருந்த பெற்றோர்கள் ஆரவாரமாகக் கைதட்டினர்.

பிறகு பரிசளிப்பு ஆரம்பமாகியது. ஒவ்வொரு பிள்ளைகளாக மேடைக்குப் போயினர். புத்தகங்கள் விளையாட்டுச் சாமான்கள், பொம்மைகள் என வாங்கி இறங்கினர்.. அவர்கள் பெருமிதத்தோடு போய் வாங்கினர். அவர்களுடைய பெற்றோர்கள் பலமாகக் கைதட்டினர், மகேஸ்வரியின் அம்மாவும் கைதட்டினார். மகேஸ்வரியும் சேர்ந்து கொண்டாள்; தான் பரிசு பெறுவது போன்ற உணர்ச்சியோடு கைதட்டினாள்.

எல்லாப் பிள்ளைகளும் பரிசு பெற்று விட்டனர், ஆனால் ஒரே ஒரு பரிசு மட்டும் பாக்கியாக மேசையிலிருந்தது. விஜயலட்சுமி டீச்சர் மேடைக்குப் போகிறார்.

''இப்பொழுது ஒரே ஒரு பரிசு மட்டும் மிச்சமாகக் கிடக்கிறது. இது முக்கியமான விஷயத்துக்காக கொடுக்கப்படும் முக்கியமான பரிசு. இந்தப் பரிசுக்குரிய பணத்தை மாணவிகளும் நானுமாகக் கொடுத்தோம். பாடத்திற்காகக் கொடுபடும் பரிசு அல்ல. கைப்பணிக்காக அளிக்கப்படும் பரிசும் அல்ல. நல்ல குணத்திற்காக கொடுக்கப்படும் பரிசு. மகேஸ்வரி கெட்டிக்காரப் பிள்ளையல்ல. நல்ல பிள்ளை. இரக்கமான குணத்தால் சிறப்பான இடத்தை வகித்து விட்டாள், பரிசை வந்து பெற்றுக் கொள்ளவும்.,'

விஜயலட்சுமி டீச்சர் பேசி முடித்தார்.

அவளுக்கும் ஒரு பரிசு இருக்கிறது என்பதை அவளால் நம்ப முடியவில்லை. தயாள உள்ளத்திற்கும் ஒரு பரிசா? ஆம் கச்சிதமான பரிசு. முகம் சிவக்க மேடைக்குப் போனாள். அம்மாவுக்கோ ஆச்சரியம் தாள முடியவில்லை. ஆனந்தத்தால் அப்படியே சிலையாகி விட்டார், கைதட்டக் கூட உணர்வு வரவில்லை.

மண்டபம் அதிர கைதட்டல் கிளம்பியது. மகேஸ்வரி பரிசு வாங்கும் போது எழுந்த கைதட்டல் ரொம்ப நேரம் நீடித்தது. பரிசை வாங்கிக் கொண்டு வந்து அவளுடைய இடத்தில் வந்து இருக்கும்வரை கைதட்டப்பட்டுக் கொண்டே இருந்தது.

விஜயலட்சுமி டீச்சர் அன்போடு தலையைத் தடவி அனுப்பினார். தலைமை ஆசிரியை புன்னகை உதிர்த்தார்.

வீட்டுக்குப் போன மகேஸ்வரி பெட்டியைத் திறந்துபார்த்தாள். சிரித்த முகத்தோடு இருக்கும் பொம்மையைப் பார்த்தாள்; அழகான பொம்மை. அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

'மகேஸ்! உன்னுடைய நல்ல குணத்திற்காக ஒரு பரிசு பெற்றதையிட்டு நான் ரொம்பவும் பெருமைப்படுகிறேன். பாடத்தில் பரிசு பெற்றிருந்தால் நான் இந்த அளவுக்கு ஆனந்தம் அடைந்திருக்க மாட்டேன்'' என்றார்.

''அம்மா, இப்பொழுது தான் எனக்கு ஒரு விஷயம் புரிந்தது. ஏன் இந்தப் பிள்ளைகள் எல்லாரும் கூடிக் கூடிக் கதைத்தார்கள் என்று. எனக்கு இந்தப் பரிசைக் கொடுக்கத் தான் அவர்கள் எல்லாரும் என்னைக் கிட்ட வரவிடாமல் பேசினார்கள். அம்மா எனக்காகப் பணம் சேர்த்த அந்தப் பிள்ளைகளைக் கூப்பிட்டு ஒரு டீ பார்ட்டி வைப்போமா?'' என்று கேட்டாள்.

அம்மா வேண்டாம் என்று சொன்னதுண்டா? சரியென்று தலையை ஆட்டினார். 'நாளைக்கு ஒரு புதுச்சட்டை தைத்துத் தருகிறேன், உன் பொம்மைக்கு. தொடர்ந்தும் நல்ல பிள்ளை என்றே பெயர் எடு'' என்றார். மகேஸ்வரியும் தலையை ஆட்டினாள்.


மல்லிகை

# கலை இலக்கிய மாத இதழ்

ஆசிரியர்:
டொமினிக் ஜீவா

60, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கலாவதி கறுப்பு

—து. வைத்திலிங்கம்

★ அவள் உடல் கறுப்புத்தான் என்றாலும் உள்ளம் மிக மிக வெள்ளை.

வீடு என்னமோ மிகவும் கலகலப்புடன் இருப்பதாக எனக்கு படுகிறது?

நடு அறையில், கதவு நிலைக்கு எதிரில் மாட்டி யிருந்த முருகன் படத்தில் செருகியிருந்த உயர்ந்த தர ஊதுபத்தியினின்றும் புறப்பட்டு வந்த சுகந்த பரிமள வாசனை என் நாசிகளில் ஏறி என்னை ஒரு மோகன நிலைக்கு கொண்டு சென்றது .அந்த முருகன் படம் திருச்செந்தூரில் வேண்டியது. சென்ற திருக்கார்த்திகை உற்சவத்துக்கு ஸ்தலயாத்திரை சென்ற போது, என் மகள் கலாவதி ஒரே பிடிவாதமாய் நின்று இந்தப் படத்தையே தெரிவு செய்து வாங்கினாள். என்ன தவறினாலும், காலையில் நெற்றி நிறைய விபூதி அணிந்து கொண்டு பெரிய செவ்வரத்தைப் பூக்களை கொய்து இந்த முருகன் படத்துக்கும் வீட்டு வாசலில் நிற்கும் துளசிச் செடிக்கும் சாத்தி விட்டு ஊதுபத்தியையும் கொளுத்தி விட்டு, கண்களை மூடிய படியே சுமார் கால் மணித்தியாலமாவது நின்று பிரார்த்திப்பாள் அவள். அவளது அந்த இடைவிடாத பிரார்த்தனை இன்று பலனைக் கொண்டு வரப் போகின்றதா ? தன் அறையில் நின்றபடியே பாடினாள் கலாவதி அவள் குரலில் இனிமை இருக்கத்தான் செய்கிறது. அந்தக்குறையும் இருக்க கூடாது என்றுதானே அவளுக்கு முறையாக சங்கீதம் கற்பித்து வைத்தேன். கலாவதியின் குரலில், இனிமையுடன் ஒரு வித நம்பிக்கையும் இருப்பதாக எனக்குப்படுகிறது.



கலா சும்மா பாடிக்கொண்டு நிற்காதே! இங்கே வா! வந்து முகத்தை கழுவி அந்த ரோஸ் நிற பட்டுச் சேலையை கட்டிக் கொண்டு நில்!''

ஓ! என் மனைவி மிகவும் பரபரப்புடன் தன் மகளை ஏவுகிறாள்! அவளுக்கும் இன்று, என்றுமே இல்லாத நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றதோ!

அப்படியாயின் எனக்கு மட்டும் இந்த நம்பிக்கை உள்ளத்தில் எழும்ப மறுக்கின்றதே? ஏன்?

''முருகா!''

என் வாய் என்னை அறியாமல் கூற நான் திரும்பிப் பார்த்தேன் பச்சை மயில் வாகனனாய், தன் நாயகிகளுடன் ஒய்யாரமாய், சிங்காரச் சிரிப்பொன்றைச் சிந்தியபடி நின்றான் முருகன்!

இன்று என் மகள் கலாவதியைப்பெண் பார்க்க வரப்போகிறார்கள். இந்த வரன் என் பழைய நண்பர் கார்த்திகேயன் ஏற்பாடு செய்தது. அவரும் இதற்கு முன் என் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்து விடவேண்டுமென்று இதுவரை ஐந்து வரன்களைக் கொண்டு வந்தார். ஆனால் எல்லாமே கைநழுவிச் சென்று விட்டது.

கலாவதிக்கு என்ன குறை? எஸ். எஸ். சி. பாஸ் பண்ணி

இருக்கின்றாள். அதற்குமேல் படித்து உத்தியோகம் பாக்கவேண்டிய அவசியமில்லை என்று நான் தான் மறித்து விட்டேன். இசை பயின்றிருக்கிறாள். ஒரு நல்ல நாள் பெரிய நாளென்றால் நாலு பாட்டு சபையிலே கணீரென்று பாடக்கூடிய திறமையிருக்கின்றது, மனைப்பணி பரீட்சை எழுதி 'டிப்ளோமா' சர்டிபிகேட் வைத்திருக்கிறாள்; இதெல்லாவற்றையும் விட ஒரே ஒரு மகளான அவளுக்குத்தானே இந்தப் பெரிய வீடும், பாங்கியிலே தூங்கிக்கொண்டிருக்கும் முப்பதினாயிரம் பணமும்! இத்தனை சிறப்பம்சங்களுடன் திகழும் அவளுக்கு விரைவில் நல்ல வரனாக அமைந்து கல்யாணம் நடைபெறும் என்று நானும் என் மனைவியும் ஒரே நம்பிக்கையுடன் இருந்தோம்.

ஆனால் அந்த நம்பிக்கை கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர்! கலா அவள் தாயைப் போல்இல்லை தன் தகப்பனாரைப் போல் கருமை நிறம்! இது அயலவர்களின் விமர்சனம்.

கலா உண்மையில் கறுப்பு நிறம் தான். என் நண்பர் கார்த்திகேயன் பார்த்து வந்த மாப்பிள்ளைகள் ஐந்து பேரில் மூவர் பெண்ணை முன்னேற்பாடின் படி கோவிலிலும் வீட்டு வாசலிலும் பார்த்து விட்டு (இரகசியமாகத் தான்...) 'பெண் கறுப்பு' என்று வெளிப்படையாக விமர்சனம் செய்துதட்டிக் கழித்துவிட்டனர் மற்ற இருவரன்களும் தம் அம்மாமாருடன் வந்து என் மனைவி புத்துருக்கு நெய். முந்திரி வற்றல் பருப்பு எல்லாம் போட்டுத் தயார் பண்ணிய கேசரி, அல்வா ஆகிய தின் பண்டங்களை ஒரு கைபார்த்து விட்டு பின், கலா கறுப்பு தேவையில்லை என்ற சட்டிபிகேட் தந்து விட்டுச் சென்று விட்டனர்.

இந்த நிகழ்ச்சிகளால் நானும் என் மனைவியும் பெரிதும் விசனப் பட்டோம். எங்கள் விசனத்தை விட எங்கள் மகள் கலாவதிதான் தன்னிடம் அவளறியாமலே ஏற்பட்டகுறையை அறிந்து அதால் வந்த விளைவைக் கண்டு பெரிதும் வாடினாள். அவள் கறுப்பாகப் பிறந்தது ஒரு பெரிய குற்றமா?. இந்தக் கேள்விக்கு இன்னுமே நான் விடை காணமுடியவில்லை.

இன்று வரப்போகின்ற வரனைப் பற்றி நண்பர் கார்த்திகேயன் பெரிதும் சிலாகித்துச் சொல்லியிருந்தார். பையன் குடும்பத்தில் மூத்தமகன். தந்தை இல்லை. வெளிநாட்டுக்கு ஸ்காலர்ஷிப்பில் சென்று படித்து விட்டு, இப்பொழுது சமூகசேவை அதிகாரியாய் கடமையாற்றுகின்றான்.

நண்பர் எங்களைப்பற்றி முக்கியமாக என் மகள் கலாவைப் பற்றி நன்றாகவே அவர்களிடம் சொல்லியிருக்கின்றாராம். ஆனால் நான் அவரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். தயவு செய்து பெண் கறுப்பு என்பதை முன்னாடியே பையனிடம் கூறி விடுங்கள்! பின்னர் ஏமாறுவதை விட, ஆரம்பத்திலேயே வரும் அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ளலாம்.''

நடராஜா. நீ ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம். பையன் வெளி நாடெல்லாம் சென்று வந்தவன் நல்ல விசாலமான உள்ளம் கொண்டவன் மாதிரித் தோன்றுகின்றான். நான் எல்லாவற்றையும் விபரமாகக் கூறியிருக்கின்றேன். நிச்சயமாக இத்தடவை கலாவின் கல்யாணம் நடக்கத் தான்போகின்றது!''

அவர் நம்பிக்கையுடன் கூறினார்.

ஆனால் எனக்கோ.........

அவர்கள் வந்து விட்டனர். என் சிந்தனை தடைப்பட்டது. எழுந்து வரவேற்கத் தயாரானேன், முதலில் நண்பரும், அடுத்து வீட்டுக்குப் புதியவர்களான




அந்தப் பையன். அவனைத் தொடர்ந்து அவன் தாயும் தந்தையும் வந்தனர். பையன் செக்கச் செவேல் என்ற நிறத்தினனாய் உயர்ந்து தோற்றமளித்தான். நல்ல களையான முகம். இப்படிப் பட்டவனுக்கு என் பெண்ணைப் பிடிக்க வேண்டுமே? ஒரு கணம் என் மனம் ஆயிரம் தெய்வங்களை வேண்டியது. எல்லோரும் அமர்ந்தனர். பையனின் தாயாரைக் கூர்ந்து நோக்கினேன். சடாரென்று என் நினைவில் ஏதோ ஒரு பழைய ஞாபகம் தோன்றி மறைந்தது. அதைத் தொடர்ந்து ஏதேதோ நினைவலைகள் மாறி மாறி வந்து மனதில் மோதியது.

அந்த மோதலில் ஏற்பட்ட எண்ணத்து ரேகைகள் ............

அது நடந்து முப்பது வருடங்கள் இருக்குமா?

'போஸ்ட் மாஸ்டர்' உத்தியோகம் ஏற்ற புதிது. கொழும்பில் உத்தியோகம் பார்க்கப் போனவுடனேயே பிள்ளையளுக்கு கலியாணத்தையும் உடன் நடத்தி விடுவது அக்காலத்துப் பெற்றோரினது வழக்கம்.

என் பெற்றோரும் இதற்கு விதிவிலக்கல்ல!

'தம்பிக்கு ஒரு கல்யாணம் செய்து வைக்க வேண்டும்' என்று கூறி என் அம்மா எல்லா இடமும் பெண் பார்க்க ஆரம்பித்தாள்.

''அம்மா எனக்கெதற்கு இப்போ கலியாணம்? இன்னும் கொஞ்சக் காலம் போகட்டும்! இப்படி நான் தட்டிக் கழித்தேன் ஆனால் நான் லீவில் யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் அம்மாவின் முற்றுகை தொடங்கி விடும். அவளின் வேண்டுகோளுக்கு மசியாத என்னை வேறொரு காரணம் காட்டி அடிபணிய வைத்துவிட்டாள்.

''இந்த இடம் நல்ல இடம். இங்கே செய்யாவிட்டால் நிச்சயம் கிணற்றில்தான் விழுவேன்!'' — அம்மா என்னை பயமுறுத்தினார். ஆனால் கடைசி வரை அவர் அப்படிச் செய்யவில்லை. அக்காலத்தில் உத்தியோக மாப்பிள்ளைஎன்றால் கேட்கத் தேவையில்லை. ஏராளமான நிலபுலன் இருக்கிற இடமாகத் தான் அம்மா பார்த்திருந்தாள்.

''காசாய் இருபதினாயிரம் தருவார்களாம். இனி பரந்தன் வயல் வேறாம்! அம்மா மானசீகமாய் பணத்தையும், நெல் வயலையும் நினைத்து வாயெல்லாம் பல்லாய்ச் சிரித்தாள்.

பெண் பார்க்கும் படலம் முடிந்ததும் நான் வீட்டுக்கு வந்து விட்டேன்.

'என்னடா பெண் எப்படி? வருகிற மாதம் கல்யாணத் திகதியை வைப்போமா?' — அம்மாவின் நச்சரிப்புக்கு விடை கூறாமலே ரயில் ஏறிவிட்டேன்.

'நான் நினைத்தது போல்

# காணவில்லை!



என் மகன் சோமுவைக் காணவில்லை. கண்டு பிடித்துத் தகவல் கொடுப்பவர்களுக்கு ரூ, 500 இனாம்.

அருமை மகனே! சோமு, உன்னைக் காணாது துக்கத்தால் உன் அம்மா, ராட்டி, ஜில்லி எல்லோரும் பட்டினி கிடந்து கண்ணீர் விடுகிறார்கள், உடனே வா. உன் இஷ்டப்படி நீ மயிர்வளர்க்க அனுமதிக்கிறோம்.

சோ. ராமேஸ்வரள்,
பொத்துவில்

---

பெண் அமையவில்லை. பெண் கறுப்பி! எனக்கு வேண்டாம்!' —இதுதான் என் பதிலாக அமைந்தது அம்மாவுக்கு - கடித மூலம்.

'' தம்பி பெண் பார்த்து விட்டு

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237 -

செய்ய முடியாது என்று கூறுவது அழகில்லே! அது முறைமில்லே; அவள் அதிக கறுப்பு இல்லேத் தானே ! சீதனம் வேண்டுமானுல் மேலும் ஐயாயிரம் கூட்டித்தரு வார்கள். இதைச் செய் தம்பி அம்மா இடைவிடாமல் கடிதம் எழுதிஞள். ஆனல் நான் மௌனமாகி விட்டேன். உண்மையில் நான் பார்த்த பெண் கறுப்பு நிற மேதான். என் வருங்கால் மனைவியாக இருப்பவள் எப்படியிருப்பாள் என்றெல்லாம் ஆயிரம் கற்பனை செய்திருந்த நான் அப் பெண்ணைக் கண்டது மிகவும் ஏமாற்றத்துக்கு உள்ளானேன்!

என் மௌனத்தைக் கண்ட அம்மா கொழும்புக்கு ரயில் ஏறி வந்தாள்,

'' தம்பி, உடல் தான் கறுப்பே தவிர உள்ளம் வெள்ளையடா அப் பெண்ணுக்கு; இதைவிட நல்ல இடம் கிடைக்காது. எனக்காக இதற்கு நீ சம்மதிக்கத்தான் வேண்டும்!

ஆனல் நானே-:? என்மௌனம் நீடித்தது என்னைக்கண்டபடி திட்டித் தீர்த்து விட்டு அம்மா மறுபடியும் ஊருக்கு வந்து விட்டாள்.

பின்னர் நான், என்னுடன் டெலிபோன் பெண்ணுகவேலேக்கு வந்த கலாவின் அம்மாவை அவள் அழகுக்காக விரும்பி கல்யாணம் செய்த பொழுது அம்மாவும் இல்லே. என் மனைவி நல்ல சிகப்பு நிறம்.

ஆனல் கலா - - -

முப்பது வருடங்களுக்கு முன்னர் எந்தப் பெண்ணை- நான் கறுப்பு நிறம் என்று ஒதுக்கி விட்டேனே, அதே ' கறுப்பு பெண், தன் மகளுடன் என் கறுப்பு நிற மகளான கலாவை பெண்பார்க்க வந்திருக்கின்ருள். அவளின் இடது கண்ணுக்கருகே இருந்த அந்த மச்சம்... எனக்கு வியர்த்துக் கொட்டியது. நான் அவனே நினைவில் கொண்டுவந்தது போல், அவளுக்கும் என்னை தெரிந்திருக்கும்.

நிச்சயம் அவள் மறந்திருக்க மாட்டாள்.

ஒரு வேளை அவனது மகன் என் பெண்ணை தெய்வாதீனமாக விரும்பிஞலும், நிச்சயம் அவள் விரும்பமாட்டாள். தன் மகளைக் கொண்டு என்னைப் பழி வாங்கி விடுவாள்! இந்தத்தடவையும் எங்களுக்கு- கலாவுக்கு- ஏமாற்றம் தான். '' என்ன மிஸ்டர் நடராஜன்! இப்படி பேசாமல் இருந்தால்-? நண்பரின் குரலால் என் சிந்தனை குலேந்தது.

நான் என்னைச் சுதாகரித்துக் கொண்டேன்.

'' ஓ - இல்லே - நீங்கள்!

ஏதோ ஒரு பயத்தில் என் வார்த்தை குழறியது. பையனின் தாய் மெதுவான ஒரு புன்னகையை தன் முகத்தில் நெளியவிட்டாள்.

ஒரு வேளே என் பயம் இவளுக்குத்தெரிந்திருக்குமோ? அப்புன்னகை என்னைக் கலக்கியது- !

சம்பந்தமான எல்லாம் ஒவ்வொன்ருக நடந்தேறின;

இரோஸ் வண்ணத்தில் பட்டுப் புடவையுடன் வந்து அமர்ந்த என் பெண் கலாவதியின் முகம் மலாந்திருந்தது. அவளே பையனும் அவளின் அம்மாவும் கூர்ந்து நோக்கினர்.

சற்றுநேர மௌனம்-

அந்த மௌனம் என்னைக் கொல்லாமல் கொன்றது. சற்றுத் துணிவுடன் பையனின் முகத்தையும், அவளின் தாயாரது முகத்தையும் நிமிர்ந்து நோக்கினேன்'

அங்கு ஒரு வித- பூரணமானதிருப்தி நிலவுவதாக எனக்குபட்டது.

வருகிற ஐப்பசி மாதம் முதல் முகூர்த்ததுக்கு நாள் வைப்போமா.—

பேசியது அப் பெண்தான்.

''ஓம் அம்மா! அது தான் நல்லது! இது பையன். அப்பாடா! என் காதுகளேயே நம்ப முடியவில்லே.

''ஓ! அதெற்கென்ன?'' நான் மகிழ்ச்சியால்இரைந்துகூறினேன் கலாவின் நீண்டநாள் பிரார்த்தனை நிறைவேறப் போகின்றது! நான் திரும்பிப் பார்க்கின்றேன். மாருத புன்னகையுடன் முருகன் நிற்கிருன்.

முப்பது வருடங்களுக்கு முன்னர் என் அம்மா கூறியபடி கலாவதிக்கு மாமியாக வரப்போகிற வளின் உள்ளம் வெள்ளேதான். ★

---


## பழமொழியும் புதுவிளக்கமும்

முயற்சி திருவினையாக்கும் என்பதனை உணர்ந்த தமிழ் மூதறிஞர் '' ஊக்கமது கைவிடேல் '' என்று பாடிவைத்தனர். நாமும் அந்தக்கருத்திலே தான் அதைப் பாராயணம் பண்ணிவந்தோம். ஆனல் '' சொல்விளம்பி '' யின் அநுக்கிரகம் பெற்ற ஒரு நண்பர் நான் கூறுவது பிழை என்கிருர். ''ஊக்கமது கைவிடேல் என்ருல் ஊக்கத்தைத் தருவதாகிய மதுவை (மதுபானத்தை) கைவிடாதே என்று பெரியவர்கள் சொல்லி வைத்ததாகக் கூறுகின்ருர். அந்தச் சொற்ருெடரிலே இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் கூறுகின்ருர்.

# மண்டையைக் கலக்கிய மதமடிக்ஸ்

எனது வகுப்பு கணிதப் பாட உபாத்தியாயர் படிப்பித்துக்கொண்டிருக்கையில் வட்டத்திற்கு வெளியே உள்ள ஒரு புள்ளியில் இருந்து வட்டத்திற்கு தொடுவரை (ராஞ்சன்) கீறும் படியும். கீறிய ராஞ்சன் கோணம் 90 பாகையாகவும் இருக்கவேண்டும் என்று கூறி விட்டு இருந்தார்.

அந்த நேரத்தில் என்னிடத்தில் ஒரு கொப்பியை தவிர வேறு ஒன்றும் இல்லை. மாணவர்களைப் பார்த்தேன். எல்லோரும் இருந்த அத்தனை பேரும் வணக்கத்தில் இருப்பதைப்போல் கீறிக்கொண்டு இருந்தார்கள். நான் வெளியூரில் இருந்து வந்த வெள்ளைகாரனைப்போல பார்த்தேன். என்னுடைய ''மீடியம் வேவ்ஸ்'' பார்வைக்கும் உபாத்தியாயரின் ''ஷோட் வேவ்ஸ்'' பார்வைக்கும் இடையில் ஒரு 'அக்சிடன்' ஏற்பட்டுவிட்டது. அவருடைய பார்வை, வகுப்பறையில் இருந்த 'தார்பலகையில்' கீறுது எனது ஒணுன் முதுகில்தான் கீறும் போல இருந்தது. முதல் வட்டம் கீறவே என்னுல் முடியவில்லை. ஆண்டவன் செயலாக ஒரு வட்டம் கீற வேண்டியதற்கு எனக்கு மானிட வடிவில் இரு வட்டங்களை முன்னிலையில் காட்டினர். (வடலி வெளியில்) விளையாடுவதற்காக 'டபிள்' பூசி வைத்த கால் பந்து போல் இரண்டு கறுத்த பனம் பழத்தலை முன் கதிரையில் இருந்தது. வட்டம் கிடைத்த சந்தோஷத்தில் இனி த் தேவை யானது. வெளியில் ஒரு புள்ளியும் கோணம் 90 பாகையாக இருக்கவேணும் என்பதுதான். உடனே எனது உலக்கை வலது கையை பார்த்துவிட்டு, உலக குத்துச்சண்டை வீரன் 'கசியஸ் கிளே' எப்படி போட்டி முதலும் இறுதியாக கையை பிடிப்பாரோ அப்படியே பிடித்து அதில் இரண்டாம் விரலை நீட்டி மடக்கி அதன் முள் எலும்பை பார்த்தேன். எனது மீடியம் வேவ்ஸ் பார்வைக்கு ஒரு புள்ளியாக தெரிந்தது. புள்ளியும் கிடைத்து விட்டது.



கீறுவதுதானே என்று எண்ணிய எனது களிமண் அடைத்து வந்த மூளையால் ஒரு யோசனை கிளம்பிற்று அதாவது கிளேயின் ஒரு இடியில் வேகம் (நயின்ரி) மையில் வேகமாய் அங்கலாச்ச கறிக்கடை நாயின் மனம் கடையை மறவாதது போல (நயின்ரியில்) என்பது மறவாமல் வெளிவந்தது. அக்கம் பக்கம் பார்க்கவில்லை. அப்போது மூளையின் கொதிப்பு வேகமும் (நயின்ரி டிக்கிரீஸ் (சீ) யா) இருந்து. கையும் அதே மைல் வேகத்தில் ஆண்டவன் அர்ப்பணித்த வட்ட தலை ஒன்றில் கீறினது.


நான் உடனே 'சொரி' என்று சொன்னேன். அவரும் 'சரி' யென்ருர் அவருடைய மண்டை பொதுவிலேயே விறச்ச மண்டை கெட்டிக்கார மாணவன் 'சரி' என்று சொன்னதும் மற்றதையும் சந்தோசத்தில் அடுத்ததையும் கீறினேன், அந்த அடுத்த மாணவன் ஆ!! என்ருன் 'காதுக் கிளினிக்' முடிந்து வந்த நோயாளி மாதிரியான ஆசிரியருக்கு 'சரியா' என்று கேட்டது அப்பொழுது ஆசிரியர் 'தார்பலகையில்' தான் கீறியது முடிவடையும் நேரத்தில் திரும்பி பூர்த்தார் கெட்டிக்கார மாணவன் சொல்லுவது போல் இருந்தது. அவரும் சரி என்ருர். அப்பொழுது இரண்டாவதாக நான் கீறிய (ராஞ்சன்) கீறப்பட்ட மாணவன். 'வேள்விக்கு நின்ற ஆடு தனது கழுத்து 'வடை மாலையை பார்பதுபோல். இருப்பதை பார்த்து வகுப்பில். இருபால் உள்ள அனைவரும் பேரொலிவிட்டு சிரித்தனர். விளக்க மறியலில் இருந்து வெளி விட்டவனைப்போல் எல்லோரையும் ஆசிரியர் பார்த்தார். நான் மூக்கைப்பிடித்தால் வாயை திறக்க தெரியாத குழந்தை போல் இருப்பதை கண்டவுடன் திரும்பவும் மாணவர்கள் சிரித்தார்கள். ஆசிரியருடைய கண்ணில் மண்டியீட்டு கிடக்கும் மாணவன் அகப்பட்டுகொண்டான். அந்த மாணவனை தன் இடத்துக்கு வரும்படி சொன்னுர் அவரால் போகமுடியவில்லை பக்கத்தில் இருந்த கெட்டிக்கார மாணவன் காரில் அடிபட்டவனை 'டாக்சியில்' கொண்டு போனமாதிரியாக கொண்டு போனுர். அவருடைய கண்களில் இருந்து மகாவலி கங்கை கண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அதைக் கண்ட ஆசிரியர் நடந்ததை சொல்லும்படி கூறினுர். மாணவன் 'சேக்கிழார்' கதை சொல்ல ஆரம்பித்து விட்டார். எனது மண்டை ஒரு 'ஓவலோட் மண் லொறியின் 'மக்காட்' முட்டிய மாதிரி ஒரு 'குட்டு' திரு என்னும் மாண

வன் குட்டிவிட்டார் என்று யமனைக் கண்ட நாயின் 'ஊளை' குரல் மாதிரி அழுகைக்குரலில் சொன்னார். இதைக் கேட்ட வுடன் மாணவர்கள் சில சங் கீத வித்துவான்களை மேடையை விட்டு இறக்குவதற்கு எவ்வளவு தீவிரமாக அடுத்து அடுத்து கைதட்டி சிரிப்பார்களோ, அதேபோல் வகுப்பறையிலும் நடந்தது.

நான் ஆப்பை இழுத்த குரங் கைப்போல் முழுசினேன். வளர்த்த நாய் முகத்தை பார்ப் பது மாதிரி வாத்தியார் முகத் தை பார்த்தேன் முதலியார் கோட்டில் கூப்பிட்டமாதிரி கொப்பியுடன் வரசொன்னார் உடனே நான் ஆஸ்பத்திரி அக் சிடன் வாட்டில் இருப்பவனுக்கு 'கொர்லிக்ஸ்' கொண்டு போவதுபோல கொப்பியுடன் போனேன் அவர் கொப்பியை வழக்கறிஞர் உறுதிபார்ப்பது போல் பார்த்துவிட்டு என்னி டம் நடந்தவற்றை விபரமாக பொய் சொல்லாமல் சொல்லும் படி மேசையில் இருந்த 'பிரம்பை' காட்டினார். பார்த்த வுடன் பிரபல தவில் வித்து வான் வைத்திருக்கும். தவில்தடி போல் அதன் மொத்தம் நீளம் (சி. டபிள்யூ. ஈ.) புடவைகடை யார் தடிபோல் இருந்தது. உண் மையை சொல்லாவிட்டால் தப் பவே முடியாது அடித்தாலும் ஆடிவேலுக்கு வித்துவான்மார் கள் என்ன மாதிரியாக தவில் அடியோசை ஒலிபெருக்கியில் கேட்குமோ அதே போல அப்பொழுது இருதலை கொள்ளி எறும்பு போல் நின்று கொண்டு சொன்னேன்.

மாஸ்டர் என்னிடத்தில் ஒரு கொப்பியை தவிர வேறுபுத்தகங் களோ, உபகரணங்களோ! இல்லை. உங்களுடைய கணிதப் பாடத்திற்கு உங்களுடைய நாப் பது நிமிடமும் படிப்பித்து விட்டு மிகுதி ஐந்து நிமிடத் துக்குள் இந்த (''வட்டத்துக்கு வெளியில் உள்ள புள்ளியில் இருந்து வட்டத்திற்கு தொடு வரை ராஞ்சன் கீறவும்'') இரண்டாவது கீறப்பட ராஞ்ச னால் உண்டாக்கப்படும் கோணம் 90 பாகை எனவும் இருக்க கீறும் படி சொன்னீர்கள். எனக்கு உள்ளது ஒரே ஒரு மூளை இரண்டையும் செய்யமுடியாது என்றேன். இதைக்கேட்டதும் மாணவர்கள் சிரித்தனர். ஏன் முடியாது என்றார். அரசாங்கமே எங்களுடைய மாணவ நிலையை அறிந்த 3 மணித்தியாலம் என்று தடித்த எழுத்தில் போட்டு விட் டார்கள். என்றேன் சிரிப்பு அதி கரித்தது இப்படியே. சமாளிக்க பார்த்தேன் முடியவில்லை. மாஸ் டர் இரட்டை காலில் மிகுதியை சொல்லுமாறு நின்று கொண் டார். நான் சொன்னேன் நீங் கள் படிப்பித்த மாதிரி முதலில் கணிதத்தில் 3 பிரிவுகள் என்றீர் கள் (எண் கணிதம்) (அட்சர கணிதம்) (கேத்திர கணிதம்) இந்த முறையில் கணக்கை செய்ய ஆரம்பித்தேன், 90 பாகையை வேகமாக சுற்றும் பொழுது கிளேயின் 90 மையில் வேகம் வந்தது. அப் பொழுது எனது பின்னம் எண் கணித முறையில் சரியாக இருந் தது. பிறகு அட்சர கணித முறை யில் (பாகையும்) (வேகத்தை யும்)அடைப்புக் குறியில் போட்டு நீக்கியும் பார்த்தேன். அதுவும் சரியாய் இருந்தது. உடனே காந் தீஜி சொன்ன மாதிரி தன் கையே தனக்குதவி என்ற நோக் கத்துடன் நேரமும் ஆகிவிட் டது. நீங்களும் அடித்து விடு வீர்கள். ஒன்று பிழைத்தாலும் மற்றதாவது சரியாக இருக்கட் டும் என்று இரண்டு 'ராஞ்சன்' கீறிவிட்டேன், பிறகுதான் எனக்கு முன்னிலையில் இருந்தது

## எனக்குத் தலை மொட்டை



தண்ணி நில்லாது ஓடும்
தடவி விட்டால் போதும்
எண்ணெய் சொட்டு இரண்டு
இட்டு விட்டால் வழியும்.

மண்ணை வாரி இறையும்
மலைத்தல்கொள்ள மாட்டேன்
சண்டை வரட்டும் பார்ப்போம்
சலிப்பே கொள்ளல் செய்யேன்

கண்ணியந்தான் பாரும்
கல்லைக் காணில் பயமே
எண்ணுவதுமேன் பலமாய்
எனக்குத் தலையே மொட்டை.

மேலல்வையூர் ஆ. பொன்னையா.

இரண்டு மாணவர்களுடைய தலைகள் என்பது தெரிய வந்தது. உடனே மாணவரும் ஆசிரியரும் என்னைப் பார்த்து கேலியுடன் சிரித்தனர். ஆசிரியர், மாணவர்களே! மாணவன் 'திரு' என்பவர் சொன்னது யாவற்கும் விளங்கியதுதானே! அவர்கள் 'ஆம்' என்றார்கள். அவர் கீறிய ரான்சன் குட்டைப் போல நீங்கள் இருவரும் அவருக்கு கீறவும் என்றார். உடனே வகுப்பில் பெண்பால் பிள்ளைகள் ஆண்பால் பிள்ளைகள் இருவரும் இருந்ததைக் கூட எண்ணாமல் இரண்டு பெரிய குட்டுகள் ஒரே இடத்தில் மயிரிழை கூடத் தவறாமல் குட்டி விட்டார்கள். அப்பொழுது அனைவருக்கும் முன்னிலையில் கண்ணீர் விட்டு அழுதேன் அவமானம் தாங்க முடியவில்லை. வேட்பாளர்கள் ஒரே மேடையில் சவால் விட்ட மாதிரி நானும் ஒரு திகரப் பாடம் பிழைத்தாலும் அடுத்த திகரமாவது வெற்றியுடன் கீறுவேன் என்ற எண்ணத்தில் ஆசிரியரிடம் சவால் விட்டேன். அது என்னவென்றால் (1) அடுத்த அத்தியாய பாடம் என்னவென்ற கேள்வியை கேட்டேன்.

ஆசிரியர் சொன்ன பதில்-

வெளியே ஒரு புள்ளியில் இருந்து ஒரு வட்டத்தில் இரண்டு ராஞ்சன்கள் கீறலாம் என்றார்.

........... உடனேநான் சொன்னேன் ஆசிரியரே! நீங்கள் இப்பொழுது இரண்டாவதாக சொன்ன திகரத்தின் மறுதலையை கீறிவிட்டார்கள்என்றதும் மாணவர்கள் சிரித்தார்கள். ஆசிரியரும் இரண்டு மாணவரும் மட்டும். ஒன்று புரியாமல் யோசித்தார்சள் சிறிது நேரத்தில் ஆசிரியர் நான் சொல்லிக்காத எல்லாம் மாணவனே நீ எப்படி தெரிந்து கொண்டாய். என்பதை அனைவருக்கும் கூறும்படி சென்னார்

# கவிதை எழுதுவது எப்படி?

ஒரு புதினப் பத்திரிகையை எடுத்துக் கொள்ளுங்கள், ஒரு கத்தரிக் கோலையும் எடுத்துக் கொள்ளுங்கள். பத்திரிகையில் ஒரு கட்டுரையைத் தேர்ந்தெடுத்து அதை கத்தரித்து எடுத்துக்கொள்ளுங்கள். அதன் பின்பு அக்கட்டுரையில் உள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக வெட்டி ஒரு பையில் போட்டுக் குலுக்கியபின் வெளியே கொட்டுங்கள். வார்த்தைகள் வந்தபடி எடுத்து அவற்றை வசனங்களாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். அது கவிதையாகும்.

என்ன பயித்தியம் என்று யோசிக்கிறீர்களா?

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் சூரிச் நகரில் வாழ்ந்த றிஸ்ரன் ஸாரா என்ற ஒருவர் தான் இப்படிச் சொல்லியிருக்கிறார். அவர் 1816ம் ஆண்டில் சூரிச் நகரில் ஒரு கலை இலக்கியப் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தியவர். அவருடைய குழுவினர் டடேயிஸ்ற்' என அழைக்கப்பட்டனர். அவர்கள் ஒரு சூனிய வாதிகளாவர். எதையும் உடைப்பு, எதற்கும் எதிர்ப்பு, சட்ட திட்டங்கள், சமுதாயம், அரசாங்கம், சமயம், ஏன் இலக்கியத்துக்கும் கூட எதிராகப் புரட்சி செய்தவர்கள்.

இவர்களுடைய இயக்கம் பிரான்சில் பரவியபோது அங்கு அவர்களால் நடத்தப்பட்ட கூட்டங்களுக்குச் சென்றவர்களுக்கு அழுகிய தக்காளிப் பழங்களால் எறிந்தார்களாம்!

அவர்களுடைய சிற்ப சித்திரக் கண்காட்சிகளுக்குச் சென்றவர்களிடம் கைக்கோடாரிகளைக் கொடுத்தார்களாம். தங்கள் காட்சிப் பொருட்களை கீறிக் கிழித்து அடித்து நொறுக்குவதற்கு!

அருள்

---

கல்யாணம் ஆகாய விமானம் போன்றது. சிலசமயம் சோம்பலாக இருக்கும். ஆனால் எந்த சமயமும் அபாயம் நிறைந்தது.

— லிடில் ஹட்.

---


வளர்க்கும் மீன்ளுக்கு

**பிஷ்மெக்ஸ்**

மீன் உணவையே

கொடுங்கள்




பிஷ்மெக்ஸ்

இப்பொழுது இலங்கையில் எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது.

" பிஷ்மெக்ஸ் "

பிறவுண்சனின்

ஒரு தயாரிப்பு!

# பின்  சிரிப்பு

என்ன பிள்ளை முன்னுலே இறைச்சித்தூள் தேங்காப்பால் எல்லாம் வைச்சுப் போட்டு நாடியிலே கை வைச்சு கொண்டு ஏங்கிப் போயிருக்கிறே!

அதையேன் பேசுவான். அறுக்கக் கொண்டு போன கோழி அறுத்துகொண்டோடிட்டுது அவரும் பின்னுலே ஓடித்திரியிருர்·

★

ஒருவர்: என்ன தந்தியைப் பார்த்து ரசித்துக் கொண்டு நிற்கிருய்?

நாட்டவர்: மருமகன் தந்தி அனுப்பி இருக்கிருர். ஷ... மருமகனின் கையெழுத்து நல்லாயிருக்கு!

சம்போ

வீட்டுப்பணி ஆசிரியை: பால் பழுதாகாமல் வைத்திருக்க என்ன செய்ய வேண்டும்?

மாணவன்: பாலைக் கறவாமல் பசுவிலே விட்டு வைக்க வேண்டும்.

துளசி.

என்னங்க அவர் தலைகால் தெரியாமல் துள்ளிகிட்டு போருரே! ஸ்வீப் விழுந்திருக்கா

அதெல்லாம் ஒண்ணுமில்லே அவர் அபிமானநடிகை தீபாவளி வாழ்த்து அனுப்பியிருக்கிருளாம்.

★

தந்தை: இந்தளவு காலமும் கஷ்டப்பட்டு உன்னை ஆங்கிலம் படிக்க வைத்தேன். எங்கே உன்னுடைய பெயரை ஆங்கிலத்தில் சொல்லு பார்ப்பம்?

மகன்; கந்தையா.

தந்தை: என்ன தமிழிலை சொல்லுகிருய்?

மகன்: ஆங்கிலத்திலும் கந்தையா என்றுதான் சொல்றது.

தந்தை; நாசமாய்ப் போ! உனக்கு ஆங்கிலத்தில் சொல்லத் தெரியாது போல நீ படித்தது போதும்.

- மணி

எங்கே ஐயா உங்க மனைவியை காணேம்,

அவ தீபாவளிக்கு தன் முடி மயிருக்கு எண்ணை வச்சுஸ்னனம் பண்ணிக்கிட்டு இருக்கா ஐயா.

★

என்ன சார் பெரிய ஹோர்கிரீம் பாட்டிலை கொண்டு போறிங்க

நம்ம மாப்பிள்ளை தீபாவளிக்கு தலைக்கு வச்சு முழுக சார்.

★

மனைவி; என்னங்க பக்கத்து வீட்டுக்கு நெருப்பு வைச்சு இரண்டுவருஷம் ஜெயிலுக்கு போனீங்களே! அடுப்புக்கு நெருப்பு வைக்கத் தெரியவில்லையே!

★

புலவர்: தம்பி என் மகளுக்கு நீ காதல் கடிதம் எழுதுறதைப் பத்தி எனக்கு ஆட்சேபனை இல்லை, ஆனுல்— எழுதிற கடிதத்தை வசன நடையிலே எழுதாம, கவி நடையிலே எழுது.

*With best Compliments*

*of*

**ZELLERS CONFECTIONERIES**

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. பதிவு இலக்கம்: கியூபீ-59/300

தா தையின்னு குதிக்கிறதை விட்டு தை தையென்று சொன்னேன் கேட்டியாடி? தையல் தெரியாததினாலேதான் பெண் பார்க்க வந்தவங்க உன்னை வேண்டாமின்னுட்டாங்க. 'முயல் மார்க்' நூல்லே எவ்வளவு சீக்கிரமகத் தையல் பழகலாம் தெரியுமா?



வானவில் வர்ணங்களில் வகைவகையான முயல் மார்க் தையல் நூல்களை எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,

கொழும்பு-12

101/4 சென் பெனடிக்ஸ் வீதி, கொழும்பு-13ல் உள்ள சி. சிவ ஞானசுந்தரம் அவர்களால் 201, டாம் வீதியிலுள்ள குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 21388.